விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 106 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 21 புதன்கிழமை (03.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட
# முருகன், பயஸ், ஜெயக்குமார்
# இன்று தாயகம் திரும்புகின்றனர்


முருகன்


ரெபேர்ட் பயஸ்


ஜெயக்குமார்

(திருச்சி)

ராஜிவ் காந்தி கொலைக் குற்றச்சாட்டில் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ள முருகன், ரொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் தாயகம் அழைத்து வரப்படவுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு சென்னை விமான நிலையத்தில் இருந்து அழைத்து வரப்படும் இவர்கள் காலை 11.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.(15ஆம் பக்கம் பார்க்க)

## பெறுமதி சேர் வரிச் சட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றம்

(கொழும்பு)

பெறுமதி சேர் வரிச் சட்டம் மூலம் நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன் றத்தில் 36 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது

அதன்படி அதற்கு ஆதரவாக 55 வாக்குகளும் எதிராக 19 வாக்குகளும் பதிவாகியிருந்தன.

இதனையடுத்து பாராளுமன்றம்




ஏப்ரல் 24ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. 15

## பொருளாதாரம் மீண்டாலும் வறுமை உயர்வாக உள்ளது
### உலக வங்கியின் பணிப்பாளர்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரம் மீண்டாலும் வறுமை நிலை உயர்வாகவே காணப்படுகின் றது என உலக வங்கியின் பணிப்பாளர் பாரிஸ் ஹடாட்ட ரெஸோஸ் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரி விக்கும்போது மேற்கண்டவாறு 16



## சதொசவில் பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு 09 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு லங்கா சதொச நிறுவனம் தீர்மானித் துள்ளது. 15

### கிளிநொச்சியில் இரு தரப்புக்களிடையே வாய்த்தர்க்கம்
## உணவில் விஷம் கலக்கப்பட்டதோடு முக்கிய ஆவணங்களும் தீயிட்டு எரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இரு தரப்புக்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக குழந்தைகளுக்கு சமைத்து வைத்த உணவில் விஷம் கலக்கப்பட்டதோடு வீட்டின் முக்கிய ஆவணங்களும் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழ வனூர் பகுதியில் நேற்று இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை இருவீட் டாருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக வீட்டு உரிமையாளர் இல் லாத சமயத்தில் வீட்டின் ஒரு அறையில் இருந்த முக்கிய ஆவணங்கள் மற் றும் உடு புடைவை 15

## வவுனியாவில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா, செட்டிகுளம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதி யில் நேற்றுமுன்தினம் மாலை இச்சம்பவம் 15

### உழவு இயந்திரம் ஏறியதில்
## குடும்பஸ்தர் பலி
### வலிப்பு ஏற்பட்டதால் கீழே விழுந்ததில் விபரீதம்

(முல்லைத்தீவு)

வலிப்பு ஏற்பட்டதையடுத்து உழவு இயந்திரத்திலிருந்து கீழே விழுந்த இளம் குடும் பஸ்தர் மீது உழவு இயந்திரம் ஏறியதில் 15

### அராலி கிழக்கில்
## வீடொன்று எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி கிழக்கு பகுதியில் வீடு ஒன்று தீயில் எரிந்து முழுமையாக சேதமடைந்துள்ளது.

இச்சம்பவமானது 15

### உரையாற்ற யாரும் இல்லை
## சபை ஒத்திவைப்பு

(கொழும்பு)

வங்கித் திருத்தச் சட்டமூல விவாதத்தில் உரையாற்று வதற்கு அழைக்கப்பட்ட ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இல் லாததால், பிரதி சபாநாயகர் அஜித் 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் ஜனாதிபதியானால்

# ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளி தப்பிக்க முடியாது - சஜித்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குற்றவாளிகளுக்கு தாம் ஜனாதிபதியானால் தண்டனை வழங்கப்படும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதியாக தாம், பதவியேற்ற பின் இரு மாத காலப் பகுதிக்குள் 1948 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்படும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது இதனை அவர் குறிப்பிட்டிருந்தார்.

குறித்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்ட ஆறு வாரங்களுக்குள் ஸ்கொட்லண்ட் யார்ட் (Scotland yard) மற்றும் அமெரிக்க உளவு நிறுவனம் (FBI) போன்றவற்றுடன் இணைந்து விசாரணைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐந்து வருடங்களுக்கு முன் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல் பலரது அரசியல் தேவைகளுக்காகவே நடத்தப்பட்டது என பல விமர்சனங்களும் கருத்துக்களும் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகின்றன.

மேலும், இதன் பிரதான சூத்திரதாரி அரசியல் நோக்கத்துக்காகவே பாதுகாக்கப்பட்டு வருகிறார் என்ற கருத்தும் நிலவி வருகிறது.

குறித்த சம்பவம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் தகவல் கிடைத்ததாக பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன தெரிவித்துள்ளமை உள்ளிட்ட பல காரணிகள் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளன.

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் சம்பவத்தால் 45 வெளிநாட்டு பிரஜைகள் உட்பட 269 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில் 500 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தார்கள். பலர் இன்றும் படுக்கையில் விசேட தேவையுடையவர்களாக காணப்படுகிறார்கள்.

எவ்வாறாயினும், குறித்த சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்கள் நாட்டு மக்களே. அவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும் என்பது ஆட்சியாளர்களின் பாரிய பொறுப்பாக அமைந்துள்ளது. (ம-7,10)

## உளுந்து இறக்குமதி அமைச்சரவை அனுமதி

2,000 மெட்ரிக் தொன் உளுந்து இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பண்டிகைக் காலங்களில் உளுந்து தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்கவும், விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கும் விசேட பண்டவரி சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள வரிகளுக்கு உட்பட்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, அரச வர்த்தக கூட்டுத்தாபனம், தேசிய உணவு அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை ஹதபிம அதிகாரசபை ஆகியவற்றின் ஊடாக மாத்திரம் உளுந்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## ஞானசார தேரரை பிணையில் விடுவிக்க நீதிமன்றம் மறுப்பு

இஸ்லாமியர்களை அவமதித்த வழக்கில் 4 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரரை பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மறுத்துள்ளது.

இதன்படி, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே, பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் பிணை மனுவை நிராகரித்துள்ளார்.

ஞானசார தேரரை பிணையில் விடுவிப்பதற்கான விசேட சூழ்நிலைகள் எதுவும் நீதிமன்றில் முன்வைக்கப்படவில்லை என, அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## ஐ.பி.எல் போட்டியால் கொழும்பில் உயிரிழந்த தமிழ் இளைஞன்

கொழும்பில், ஐபில் போட்டி பார்க்கவேண்டும் என்பதற்காக துவிச்சக்கர வண்டியில் அதிவேகமாக பயணித்த இளைஞர் மின்கம்பத்தில் மோதி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் கொழும்பு கல்கிசையை சேர்ந்த 17 வயது இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கடந்த முறை இடம்பெற்ற க.பொ.த உயர்தர பரீட்சை எழுதிய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந் நிலையில், கிரிகெட் போட்டி மீதான மோகம் இளைஞரின் உயிரை பறித்த சம்பவம் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம-7,10)

## ஜனாதிபதித் தேர்தலில் பொதுச் சின்னத்தில் ரணில் போட்டியிட வேண்டும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யானைச் சின்னத்தில் போட்டியிட்டால் அவருக்கு உதவமாட்டேன் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்ட முன்னாள் உள்ளூராட்சி தலைவர்களுடன் உடுகம்பலை அரசியல் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

இதேவேளை எதிரணியினர் என்ன சொன்னாலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையும் எண்ணம் தமக்கு இல்லை எனவும் தற்போதைய ஜனாதிபதி, ஜனாதிபதித் தேர்தலில் யானைச் சின்னமோ, மொட்டு சின்னமோ அல்ல, பொதுச் சின்னத்தில் தேசிய வேட்பாளராக போட்டியிட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டுமானால் அதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவு தேவை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்துவது தொடர்பில் கட்சியில் கலந்துரையாடல் இல்லை எனவும் நாமல் ஜனாதிபதி ஆவதற்கு இன்னும் காலம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7,10)

## சுற்றுலாத்துறைக்கு தேவையான வாகன இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

சுற்றுலாத்துறையின் தேவைக்காக வேன் மற்றும் சிறிய பஸ்களை இறக்குமதி செய்வதற்கு சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். அத்துடன் அந்த வாகனங்களின் இறக்குமதிக்கு சிறப்பு வரிச் சலுகைகள் எதுவும் இல்லை என அவர் தெரிவித்தார்.

அதன்படி, 6-15 இருக்கைகள் கொண்ட 750 வேன்கள் (மின்சார மற்றும் ஹைபிரிட் உட்பட) மற்றும் 16-30 இருக்கைகள் கொண்ட மினி பஸ்கள் மற்றும் 30-45 இருக்கைகள் கொண்ட 250 பேருந்துகளை இறக்குமதி செய்ய அமைச்சரவையால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. (ம-7,10)

## ஐந்து சட்டங்கள் நாட்டில் மேலும் அமுல் சபாநாயகர் மகிந்த யாப்பா

நாட்டில் மேலும் ஐந்து சட்டங்கள் அமுலுக்கு வருவதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அதன் படி பாராளுமன்றத்தில் அண்மைக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்கள் சிலவற்றை நேற்று முன்தினம் சான்றுரைப்படுத்தியிருப்பதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் அறிவித்தார்.

பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள், ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்தம்), நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்தம்), ஈடு (திருத்தம்), நிதிக் குத்தகைக்கு விடுதல் (திருத்தம்), உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்பு (திருத்தம்) மற்றும் கம்பனிகள் (திருத்தம்) ஆகிய சட்டமூலங்களையே சான்றுரைப்படுத்தியிருப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

இதற்கமைய, குறிப்பிட்ட சட்டமூலங்கள் 2024ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம், 2024ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்த) சட்டம், 2024ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்த) சட்டம், 2024ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஈடு (திருத்த) சட்டம், 2024ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் (திருத்த) சட்டம், 2024ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்பு (திருத்த) சட்டம் மற்றும் 2024 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க கம்பனிகள் (திருத்த) சட்டம் எனும் பெயரில் நடைமுறைக்கு வருகின்றதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார். (ம-7,10)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 0091956615671 9

Western Union WU MoneyGram Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974

இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்..!
SOLA CHEMICAL COMPANY (PVT) LTD

| | | | |
|---|---|---|---|
| கல்சியம் நீக்கி | 4L | ~~2200~~ | 1400 |
| சலவைத் திரவம் | 4L | ~~3200~~ | 1600 |
| டிஷ் வோஷ் | 4L | ~~1900~~ | 950 |
| ஹான்ட் வோஷ் | 4L | ~~2800~~ | 1600 |
| மாபிள் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| கண்ணாடி கிளீனர் | 4L | ~~2000~~ | 1100 |
| வோஷிங் பவுடர் | 3KG | | 900 |

576/2C, Siyambalape road, Heiyanthuduwa, Makola Reg No. PV00240433 | 288, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் 021 222 0866 / 0777 495 494


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடை குறைந்த பாண் விற்பனை;
# 305 பேக்கரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

**கடந்த மூன்று மாதங்களில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது எடை குறைவான பாணை விற்பனை செய்த 305 பேக்கரிகள் மற்றும் கடைகளுக்கு எதிராக அளவீடு தர நிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் சட்ட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.**

994 பேக்கரிகள் மற்றும் கடைகள் சோதனை செய்யப்பட்டு அவற்றில் 190 பேக்கரிகள் மற்றும்115 கடைகள்அடையாளம் காணப்பட்டன. அதன் படி, குறைந்த எடை கொண்ட பாண்களை விற்பனை செய்த பல பேக்கரிகள் மற்றும் கடைகள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. (நி-5)

# அரசியல் நோக்கத்திற்காகவே ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டது

### அந்த நோக்கத்திற்காகவே பாதுகாக்கப்படும் பிரதான சூத்திரதாரி

## எதிர்க்கட்சி பகிரங்கம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட தினத்தன்று குண்டுத்தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் அடங்கிய வாகனம் களனிகம வீதி சோதனைச் சாவடியில் வைத்து பரிசோதனை செய்யாமல் விடுவிக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் அரசியல் தேவைக்காகவே நடத்தப்பட்டது என்பதற்கு பல விடயங்களை குறிப்பிடலாம்.

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் சம்பவத்தால் பலர் உயிரிழந்து படுகாயமடைந்ததுடன் பலர் இன்றும் படுக்கையில் விசேட தேவையுடையவர்களாக உள்ளார்கள்.

இந்த சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி தொடர்பில் அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று மைத்திரிபால சிறிசேன சிறுபிள்ளை போல் பேசுகிறார். உண்மையை மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்த அவருக்கு தற் துணிவு கிடையாது.

அரசியல் நோக்கத்துக்காகவே குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. தற்போது பிரதான சூத்திரதாரியும் அரசியல் நோக்கத்துக்காவே பாதுகாக்கப்படுகிறார் என தெரிவித்துள்ளார்.

(நி-5)

# பல்கலைக்கழகங்களுக்கு புதிய ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள ஆணைக்குழு அனுமதி



(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு புதிய ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

பல விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதனால் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஏராளமான பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும் இதனை கருத்திற்கொண்டே புதிய பேராசிரியர்களை இணைத்துக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாக பேராசிரியர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அனைத்து பல்கலைக்கழகங்களிலும் சுமார் 6200 ஆசிரியர்கள் இருப்பதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளதுடன் அவர்களில் பலர் கடந்த வருடம் நாட்டை விட்டு வெளியேறியதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-5)


# இதய அஞ்சலி

## சரவணபவன் மயூரன் (Surveyor)

(Director -Maya Engineerings, B.Sc (Surveying Sc)
(Spl in Photogrammetry & Remote Sensing)
Ad Dip in Couselling Psychology (UK), Dip in HR & Ps (col),
Fl Chorn.c Dip in Project Mgt MSI, MSSRILNAC.

தோற்றம் : 23.10.1981 மறைவு : 01.04.2024



v-cut அண்ணா,
அன்பு என்றதன் வரைவிலக்கணம் எங்களுக்கு கற்றுத்தந்தது
நீங்கள் தான் - இன்று வலி என்ற
உணர்வை கற்றுத் தந்ததும் நீங்கள் தான்
உங்களால் தான் சிரித்தோம் அன்று உங்களால் தான் அழுகின்றோம் -இன்று
என்றும் உங்கள் நினைவில் உங்களை மறவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் மருமக்கள்:
செந்தூரன் - Japan (UK)
நிகேதன் - Nicks (UK)
அபிராமி - (Abhi)

(0008)

இல.21, கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரன் 'வேட்டைக்காரன்' குயின்ரன்

## பெங்களூருவை வீழ்த்தி லக்னோ அசத்தல்



பெங்களூருவுக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் லக்னோ அணி, 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. குயின்ரன் டி கொக் 81 ஓட்டங்கள் விளாசினார்.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 17ஆவது சீசன் நடக்கிறது. மொத்தம் 10 அணிகள் பங்கேற்கின்றன.

நேற்று நடந்த லீக் போட்டியில் பெங்களூரு - லக்னோ அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

**ராகுல் ஏமாற்றம்**

லக்னோ அணிக்கு குயின்ரன் டி கொக், அணித் தலைவர் ராகுல் ஜோடி ஆரம்பம் கொடுத்தது.

டாப்லே வீசிய முதல் ஓவரில் மூன்று பவுண்டரி அடித்து ஓட்டக்கணக்கை ஆரம்பித்தார் குயின்ரன். தொடர்ந்து சிராஜ் வீசிய மூன்றாவது ஓவரில் அடுத்தடுத்து இரு சிக்சர் அடித்து அசத்தினார். யாஷ் தயாள், மக்ஸ்வெல் பந்துகளை தன் பங்கிற்கு சிக்சருக்கு அனுப்பினார் ராகுல். இவர் 20 ஓட்டங்கள் எடுத்தபோது, மக்ஸ்வெல் சுழலில் சிக்கினார்.

**குயின்ரன் அரைச்சதம்**

அடுத்து வந்த தேவ்தத் படிக்கல்லை, 6 ஓட்டங்களில் வெளியேற்றினார் சிராஜ். மயங்க் தாகர் பந்தில் பவுண்டரி அடித்த குயின்ரன், 36 ஆவது பந்தில் அரைச்சதம் எட்டினார். ஐ.பி.எல்., அரங்கில் இது இவரது 22ஆவது அரைச்சதமாக அமைந்தது. மக்ஸ்வெல் பந்தில் சிக்சர் அடித்த ஸ்டாய்னிஸ் (24), அவரிடமே ஆட்டமிழந்தார்.

சிராஜ் வீசிய போட்டியின் 16வது ஓவரில் குயின்ரன், இரு பவுண்டரி அடித்தார். இவர் 56 பந்துகளில் 81 ஓட்டங்கள் எடுத்தபோது, டாப்லே பந்தில் ஆட்டமிழந்தார் ஆயுஸ் பதோனி "டக்" அவுட்டானார்.

**பூரன் "ஹட்ரிக்"**

டாப்லே போட்டியின் 19 வது ஓவரை வீசினார். இதில் நிகோலஸ் பூரன் "ஹட்ரிக்" சிக்சர் விளாச, 20 ரன் எடுக்கப்பட்டன. சிராஜ் வீசிய கடைசி ஓவரிலும் மிரட்டிய பூரன், 2 சிக்சர் அடித்தார்.

லக்னோ அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களை எடுத்தது.

பூரன் (40) ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்துவீச்சில் பெங்களூரு சார்பில் மக்ஸ்வெல் 2, டாப்லே, யாஷ் தயாள், சிராஜ் தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**விக்கெட் சரிவு**

பெங்களூரு அணிக்கு டுபிளசி, ஹோலி ஜோடி ஆரம்பம் கொடுத்தது. சித்தார்த் பந்தில் ஹோலி (22) ஆட்டமிழந்த பின் அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் சரிந்தன. டுபிளசி (19) ரன் அவுட்டானார். வேகத்தில் மிரட்டிய மயங்க் யாதவ், மக்ஸ்வெல் (0), கிறீனை (9) வெளியேற்றினார். அனுஜ் ராவத் (11) ஆட்டமிழக்க, ரஜத் படிதர் 29 ஓட்டங்கள் எடுத்து திரும்பினார்.

தினேஷ் கார்த்திக் (4) நீடிக்கவில்லை. போராடிய லாம்ரர் 33 ரன் எடுத்தார். பெங்களூரு அணி 19.4 ஓவரில் 153 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது. (ம-7,10)




### கே.சீ.சீ வெற்றிக் கிண்ணம்

## 2ஆவது சுற்றில் அரியாலை சென்றல்

கே.சீ.சீ வெற்றிக் கிண்ணம் 2024 தொடரில் அரியாலை சென்றல் அணி 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

மேற்படி தொடரின் 4ஆவது போட்டியும் நடைமுறையில் 2ஆவது போட்டியும் 29.03.2024 அன்று பிற்பகல் 1 மணிக்கு அரியாலை சென்றல் அணிக்கும் நியூஸ்ரார் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இப்போட்டியில் அரியாலை சென்றல் அணி நியூஸ்ரார் அணியை 6 இலக்குகளால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அரியாலை சென்றல் அணி களத்தடுப்பை மேற்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி 29 ஓவர்களில் சகல இலக்குகளை இழந்து 192 ஓட்டங்களை பெற்றது.

மலன்குமார் 25, தர்மியன் 22, ராகவன் 36, ராஜராம் 17, பிரசாத் 33, ஹரிசன் 19 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அரியாலை சென்றல் அணியைச் சேர்ந்த ஜனன் 6 ஓவர்களில் 43 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் டிஸான் 6 ஓவர்களில் 37 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

193 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய அரியாலை சென்றல் அணி 23.2 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 193 ஓட்டங்களை பெற்றது.

சிந்துயன் 31, துவாரகன் 48, அரசன் 16, டிசான் 43 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் நியூஸ்ரார் அணியைச் சேர்ந்த தர்மிகன் 6 ஓவர்களில் 47 ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்கினையும் நிரோஜன் 3 ஓவர்களில் 19 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் கரிசன் 3 ஓவர்களில் 14 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற அரியாலை சென்றல் அணி 2ஆவது சுற்றில் டிறிபோர்க் ஸ்ரார் அணியை 12.04.2024 காலை 8.30 மணிக்கு எதிர்கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

### கே.சீ.சீ வெற்றிக் கிண்ணம்

## 2ஆவது சுற்றில் ஸ்கந்தா ஸ்ரார்



கே.சீ.சீ வெற்றிக் கிண்ணம் 2024 தொடரில் ஸ்கந்தா ஸ்ரார் அணி இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

மேற்படி தொடரின் மூன்றாவது போட்டியும் நடைமுறையின் மூன்றாவது போட்டியும் கடந்த 30.03.2024 அன்று காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஸ்கந்தா ஸ்ரார் அணி விக்ரோரியன்ஸ் அணியை 28 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற விக்ரோரியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஸ்கந்தா ஸ்ரார் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 29.3 ஓவர்களில் ஒன்பது இலக்குகளை இழந்து 225 ஓட்டங்களினை பெற்றது.

மிதூஸன் 32, சதீஸ் 54, டிஜக்ஸன் 59, தனுஸன் 30 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் விக்ரோரியன்ஸ் அணியைச் சேர்ந்த சிவனுஜன் 2 இலக்குகளையும் விஜயகுமார் ஒரு இலக்கினையும் பிரதீபன் 3 இலக்குகளினையும் குகஷாந்த் 2 இலக்குகளையும் கரன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக்ரோரியன்ஸ் அணி 24 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 197 ஓட்டங்களை பெற்றது.

தனுஜன் 36, சிவகரன் 19, தூயவன் 73, கிரிஷாந்த் 20, விஜயகுமார் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் ஸ்கந்தா ஸ்ரார் அணியைச் சேர்ந்த தனுஜன் 1, மிதுஷாந் 1, துவிஷணன் 3, டிலக்சன் 04 இலக்குகளை கைப்பற்றினர்

இப்போட்டியில் வெற்றி பெற்ற ஸ்கந்தா ஸ்ரார் அணி 06.04.2024 பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவிருக்கும் யாழ்.பல்கலைக்கழகம் - திருநெல்வேலி Y.M.H.A அணிகளுக்கு இடையில் நடைபெற இருக்கும் முதலாவது சுற்றுப்போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் 07.04.2024 பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும் 2ஆவது சுற்றில் கலந்து கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு புதிய பணிப்பாளர் நியமனம்

(கொழும்பு)

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக டபிள்யூ.கே.டி.விஜேரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலும் புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

## தேங்காய்களை அதிகம் விரயம் செய்வதில் இலங்கை முதலிடம் - விவசாய அமைச்சர்

(கொழும்பு)

உலகில் தேங்காய்களை அதிகம் விரயம் செய்யும் நாடுகளில் இலங்கை முதலிடத்தை வகிப்பதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

தெங்கு பயிர்ச்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தேங்காய் நுகர்வுக்கான பாவனையில் ஏற்படும் விரயத்தை குறைப்பது தொடர்பான புதிய தொழில்நுட்ப அறிவை மக்களுக்கு வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்.

அத்துடன் இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு தென்னை பயிர்ச்செய்கை சபை மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை நாட்டில் அண்மைக்காலமாக வெள்ளை ஈ தாக்கம் அதிகரித்துள்ளமையால் தென்னைப் பயிர்ச்செய்கை பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் 03.02.2024 பங்குனி 11 ஆம் நாள் கும்பாபிஷேகம் கண்டார் குவலயத்துயர்ந்து வாழ்வார்

### மண்டலாபிஷேக 11 ம் நாள் 03.04.2024 -இன்று திருவோணத்தில் ஈழத்துத் திருப்பதியான் வழிபடுவோம்.

ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

**காலைக் கதிரவன் காய்ந்து வருமுன்னே**
**காலை எழுந்து வணங்கியே நின்னருள்**
**மாலை வருமுன்னே பெற்று மகிழ்ந்திடவே**
**பேசும் பெருமாள் சரணம்.**

பன்னிரண்டு சைவத்திருமுறைகள் நாம் போற்றி ஓதுவது போல் பன்னிரண்டு ஆழ்வார்களினால் பாடப்பட்ட நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களை ஆலயத்தில் ஓதுவது இன்றைய நம் நிலைப்பாடுகளையும் நம் நாட்டு நிலைப்பாடுகளையும் உணர்ந்து ஈழத்துத்திருப்பதியின் திருவடிக்கே தொண்டு புரியும் உயர்ந்த தகுதியினைப் பெறுவோம்.

சிவாச்சாரியார் தமது வழிபாட்டுத் திறனால் வானில் இருந்து காற்று அங்கிருந்து உயர்ந்த உகந்த பொருட்கள் ஆகுதி செய்த குண்ட அக்கினி அங்கு இருந்து கும்ப நீரில் அங்கு இருந்து அருள்மிகு விக்கிரகத்துக்கு இறையாற்றலைக் குவித்து அபிஷேகம் செய்து நாம் எல்லோரும் கண்டு தரிசித்து வழிபட்டோம். திவ்வியப் பிரபந்தம் ஓதுவோம் ஆழ்வார் திருவடிகளே சரணம்.

**உய்த்துணர் வென்னும் ஒளிகொள் விளக்கேற்றி**
**வைத்தவனை நாடி வலைப்படுத்தேன்-மெத்தெனவே**
**நின்றான் இருந்தான் கிடந்தான் என் நெஞ்சத்து**
**பொன்றாமை மயன்புகுந்து** (பேயாழ்வார் 2375)

ஸ்ரீமத் நாராயணனை உணர்ந்து தேடிக்கண்டு உள்விளக்கேற்றி அடியேனுக்கு உரியவனாக ஆக்கிக் கொண்டேன். திருமால் அடியேனுக்கு எவ்வித குறைவுமில்லாமல் உள்ளத்தில் மெத்தனவே இருந்தார் பள்ளி கொண்டருளினான். எம்பெருமான் அளவற்ற ஆவலும் அன்பும் அடியேனிடம் என்னே!

வேதங்கள், சமஸ்கிருதத்தில் உள்ளவையை பாமரரும் அறிந்து கொள்ளும் வகையில் இனிய தமிழில் நாலாயிரம் பிரபந்தங்களாக அருளிச் செய்துள்ளனர். திவ்யப் பிரபந்தம் முழுவதும் கிடைப்பதற்கு "நாதமுனிகள்" அவர்களை வணங்குவோம். திவ்யப் பிரபந்தங்களில் மிகவும் முக்கியமாக திருவாய் மொழியை வளர்த்து எங்கும் பரப்பிய "ராமனுஜர்" போற்றி வணங்கேவாம்.

**துறப்பேன் அல்லேனின்பம் துறவாது நின்னுருவம்**
**மறப்பே னல்லேனென்றும் மறவாது யானுலகில்**
**பிறப்பே னாக வெண்ணேன் பிறவாமை பெற்றது, நின்**
**திறத்தே னாதன்மையால் திருவிண்ணகரானே!** (1468)

ஈழத்துத் திருப்பதியில் திருக்கோயிலில் எழுந்தருளி வீற்றிருக்கும் ஸ்ரீமத் நாராயணனே! உன் இன்ப அனுபவங்களை இழக்க மாட்டேன், திருவடிவழகை மறவேன், இவ்வுலகில் மீண்டும் பிறவேன் எனத் தங்களது திருவருளின் பயனே என்றும் உணர்தேன் நாலாயிரப் பிரபந்தம் தினம் ஓதுவேன் "வண்ணை ஈழத்து ஸ்ரீவேங்கடவா" ஓம் நமோ நாராயணா"

**ஆலயங்கள் கோபுரம் உயர்ந்து அருள்**
**தரும் கோடி புண்ணியம்**
**நமது உள்ளங்கள் தாழ்ந்த மனம் நீங்க**
**திவ்வியப் பிரபந்தம் ஓதுவது உயர்ந்தது ஆகும்.**

**அன்பே தகளியா ஆர்வமே நெய் ஆக**
**இன்பு உருகு சிந்தை இடு திரியா-நன்புருகி**
**ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ் புரிந்த நான்!**
பூதத்தாழ்வார்-2182

அன்பு என்னும் பக்திபூண்டு அவ்வன்பையே அகலாகவும் எம்பெருமானை அனுதினமும் வணங்கிக் கொண்டே இருக்க வேண்டும் எனும் ஆர்வமாக அவ்வகலில் இடுகின்ற நெய்யாகவும், எம்பெருமானை உள்ளத்தே உருகுகின்ற இனிய என்மனமே அவ்வகலில் இடுகின்ற திரியாகவும் எம் ஆன்மாவானது உருகி எம்பெருமான் ஸ்ரீமத் நாராயணனுக்கு ஞானத்தைத்தரும் தமிழை அடியேன் விளக்கு ஏற்றினான் என பூதத்தாழ்வார் நாமும் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் தினம் தினம் ஓதுவோம்.

இவ்வாறு இந்த இரண்டு விளக்குகளாலும் அக இருளும் புற இருளும் விலகின. ஈழத்து திருப்பதியான் காட்சி கிடைத்தது.



க.கு.க.சிவபாலன்

## இராசிபலன்

03. 04. 2024
பங்குனி 21, புதன்கிழமை
நவமி பிற்பகல் 2.09 மணிவரை

உத்தராடம் பிற்பகல் 5.45மணிவரை
சுபநேரம் -4.41-6.10 மணிவரை
இராகுகாலம்-12.10-1.40 மணிவரை

சந்திராஷ்டமம்
ரோகினி, மிருகசீரிடம்

வளவன்


மேஷம்

எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.


கடகம்

வராத உறவினர்கள் திடீரென உங்களின் வீடுகளுக்கு வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


துலாம்

நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.


மகரம்

பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காணவேண்டிய நாள், உடல்நலன் சீராகும், போசன சுகமுண்டு.


ரிஷபம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மனக் குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.


சிம்மம்

இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.


விருச்சிகம்

வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும்,


கும்பம்

சொந்த பந்தங்களுக்காக சில செலவுகளைச் செய்ய முற்படுவீர்கள், சிறிய வேலையொன்றுக்காக சற்று அலைய நேரிடலாம், வழிபாட்டல் பெருமை காணவேண்டிய நாள்.


மிதுனம்

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், திடீர் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.


கன்னி

வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.


தனுசு

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.


மீனம்

அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

மற்றவரை மதிப்பதே உன் மகிழ்ச்சிக்கு வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அகழ்வில் ஈடுபட்ட அறுவர் பிணையில் விடுவிப்பு

(கரணவாய்)

அம்பன் பகுதியில் சட்ட விரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரங்களுடன் கைது செய்யப்பட்ட ஆறு பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 24 ஆம் திகதி மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சிறப்பு அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்ட ஆறு உழவு இயந்திரங்களும், கைது செய்யப்பட்டவர்களுக்கும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தலா ஒருலட்சம் பிணையில் விடுவிக்கப்பட்டு ள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதி மன்றில் வழக்கு இடம்பெற்ற வேளை தலா ஒரு லட்சம் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் உழவு இயந்திரங்களில் இருந்த மணல் மண் நீதிமன்றின் பொறுப்பில் எடுக்கப்பட்டு உழவு இயந்திரங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 22 ஆம் திகதி வழக்கிற்கு தவணையிடப்பட்டுள்ளது.

(நி-5-60)

# பகிரங்க மீள் ஏல அறிவித்தல்-2024
# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகளை 2024.04.10 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கோரப்படுகின்றது.

இடம்:- வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம், மானிப்பாய்
திகதி:- 2024.04.09 (செவ்வாய்க்கிழமை)
நேரம்:- மு.ப 10.30 மணி

| இல | இறைச்சிக்கடைகள் விபரம் | மீளளிக்கப் படாத ஏலவைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டின உபஅலுவலகம் | | | | |
| 1 | மானிப்பாய்பொதுச் சந்தைமாட்டிறைச்சிக் கடை | 500.00 | [illegible]9,000.00 | 600.00 |
| 2 | மானிப்பாய்பொதுச் சந்தைஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 48,629.25 | 600.00 |

(சி-0056)

ஏலம் சம்பந்தமான மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் தலைமை அலுவகம் மற்றும் உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

# மணல் அகழ்வால் அழிவடையும் பன்புல்
## பன்பாய் உற்பத்தியும் பாதிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் ஆற்றுப்படுகைகளில் உற்பத்தியாகும் பன் புல், மணல் அகழ்வு காரணமாக அழிவடைந்து வருவதனால் குடிசைக்கைத்தொழில்களில் ஒன்றான பன்பாய் உற்பத்தி பாதிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, பூநகரி, கரைச்சி ஆகிய பிரதேசங்களில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களின் பிரதான தொழில்களில் ஒன்றாக காணப்படுகின்ற பன்பாய் உற்பத்தியானது தற்போது அழிவடைந்துள்ளது. அதாவது கடந்த காலங்களில் கண்டாவளை பிரதேசத்தில் 45இற்கும் மேற்பட்ட பாய் உற்பத்தி செய்யும் தறிகள் இயங்கிய நிலையில் தற்போது ஒன்று இரண்டு பாய் உற்பத்தி செய்யும் தறிகள் மாத்திரமே இயங்கி வருகின்றன. இந்த நிலையில் பாய் உற்பத்திக்கான புல்லைப் பெற்றுக் கொள்வதிலும் உற்பத்தியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர். குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை கனகராயன் ஆறு, முடக்கனாறு, மண்டைக்கல்லாறு, நெத்தலியாறு மற்றும் வன்னேரிக்குளம் ஆகிய ஆற்றுப்படுகைகளில் குறித்த பன் புல்லானது இயற்கையாகவே காணப்பட்டது.

அண்மைக்காலமாக மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வுகள் காரணமாக குறித்த பன் புல் முழுமையாக அழிவடைந்துள்ளது. இதனால் தங்களுடைய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதுடன் தங்களது வாழ்வாதாரங்களும் இழக்கப்பட்டு இருப்பதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5-315)


# நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கை
## யாழ்.போதனாவிலும் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் 72 சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை 4 மணிநேரம் தமது சேவையில் இருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதற்கு ஆதரவாக யாழ். போதனா மருத்துவமனையிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரையில் சேவையில் இருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர். (நி-5-33)






# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி சைவ வாலிப சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக் கிழமை காலை 10 மணிக்கு "திருவடிநிழல்" மடலாயத்தில் நடைபெறும். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனாமடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 120 | 200 | 130 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 170 | 180 | 145 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 180 | 200 | 200 |
| தக்காளி | 80 | 80 | 120 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 140 | 200 | 120 |
| கோவா | 200 | 200 | 230 | 250 | 200 |
| கரட் | 250 | 350 | 300 | 350 | 280 |
| பூசணி | 180 | 150 | 140 | 160 | 100 |
| புடோல் | 180 | 180 | 120 | 100 | 120 |
| வாழைக்காய் | 180 | 100 | 130 | 200 | 100-120 |
| சின்ன வெங்காயம் | 200 | 350 | 300-400 | 250 | 150-280 |
| பெரிய வெங்காயம் | 550 | 600 | 550 | 550 | 380 |
| பாகற்காய் | 250 | 300 | 250 | 250 | 200-250 |
| வெண்டக்காய் | 100 | 150 | 140 | 250 | 100-150 |
| கருணைக் கிழங்கு | 80 | 140 | 120 | 150 | -- |
| பயற்றங்காய் | 250 | 250 | 180 | 200 | 150-200 |
| லீக்ஸ் | 300 | 250 | 300 | 300 | 210 |
| பீற்றூட் | 200 | 200 | 250 | 240 | 220 |
| கறிமிளகாய் | 350 | 150 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 600 | 800 | 300-700 |
| போஞ்சி | 200 | 200 | 250 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | -- | 160 | -- |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 100 | 100 | 50-60 |
| தேசிக்காய் | 200 | 350 | 350 | 400 | 250-350 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 80 | 80-120 | 50-110 |
| இராசவள்ளி | 400 | 350 | 450 | 400 | -- |
| வெங்காயப்பூ | 200 | 200 | -- | 400 | -- |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 120 | 60 | 80 |
| வல்லாரை | 60 | 200 | 50 | 80 | 90 |
| ஈரப்பலா | 80 | -- | -- | -- | 90 |

# விமானப்படையின் கட்டளை அதிகாரியை சந்தித்த இந்திய துணைத்தூதுவர் சாய்முரளி

(யாழ்ப்பாணம்)

இலங்கை விமானப்படையின் கட்டளை அதிகாரி குரூப் கப்டன் சமிந்த ஹேரத்தை யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இரு தரப்பு ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி மற்றும் இணைந்து செயற்பட சாத்தியமான பகுதிகள் பற்றி விவாதிக்கப்பட்டது.



குறித்த சந்திப்பில் [illegible] கலந்து [illegible] துணைத் தூதரக [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர்களின் பற்றாக்குறைால் தபால் சேவையில் தாமதம்

(கொழும்பு)

தபால் ஊழியர்களின் பற்றாக்குறையினால் நாட்டின் சில பகுதிகளில் தபால் விநியோகம் தாமதமடைந்துள்ளதாக தபால்மா அதிபர் பி.சத்குமார தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சில மாகாணங்களில் ஒரு நாள் தாமதமாக தபால் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சுமார் 2,000 தபால் ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் எமது திணைக்களத்தில் உள்ளது.

தபால் திணைக்களத்தின் ஊழியர்கள் ஓய்வு பெற்ற நிலையில் புதிய ஊழியர்களை உள்வாங்காமையினால் குறிப்பிட்ட சேவைகள் தடைப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# பெரமுனவில் இருந்து விலகவுள்ள மகிந்த ராஜபக்ஷவின் சகாக்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து எதிர்கால அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும் நோக்கில் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் சிலர் கட்சியை விட்டு விலகத் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதற்கமைய, காஞ்சன விஜேசேகர, பிரசன்ன ரணதுங்க, மஹிந்தானந்த அளுத்கமகே, பந்துல குணவர்தன, பிரமித பண்டார தென்னகோன் உள்ளிட்ட ஆளும் கட்சி முக்கியஸ்தர்கள் குழுவொன்று பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நடைபெற்ற கட்சியின் செயறகுழுக் கூட்டத்தின் போது கட்சி வேறுபாடின்றி ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பது தொடர்பாக இந்தக் குழுவினருக்கும் ராஜபக்ஷ ஆதரவாளர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏறபட்டுள்ளது.

இதன்படி, இந்தக்குழு ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாடல் நடவடிக்கை மகிந்தானந்த அளுத்கமகே தலைமையில் நடை பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து விலக திட்ட மிட்ட உறுப்பினர்கள் அனை வரும் முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)


## சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்துக்களும்



எமது பாடசாலையில் பகுதித் தலைவராகவும் உடற்கல்வி ஆசிரியராகவும் சிறப்பான கல்விப் பணி புரிந்து இன்று 03.04.2024 மணிவிழா காணும்

திருமதி. வரதநாயகி வசந்தகுமாரன்

அவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமையவும் வாழ்த்துகின்றோம். (325)

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள், யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.



## கொடிகாமம் அஞ்சல் அலுவலக காணியிலுள்ள பழைய வீடு விற்பனைக்கு

ஏ-9 வீதி கொடிகாமம் புகையிரத நிலையத்துக்கு முன்பாக திரு.கோபாலபிள்ளை கணேசமூர்த்திக்குரிய காணி உண்டு. அக்காணியில் உள்ள புதிய கட்டடத்தில் கொடிகாமம் அஞ்சல் அலுவலகம் இயங்குகிறது. அதன் பக்கத்தில் 53' X 30' அளவுள்ள பழைய வீடு புதிய கட்டடம் அமைப்பதற்காக அகற்ற வேண்டியுள்ளது. பழைய வீடு கூரை, கட்டடம் முழுமையாக விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: தம்பு கந்தையா,
மருதடிப்பிள்ளையார் கோவிலடி, கச்சாய்வீதி, கொடிகாமம்.
T.P: 077 608 1026 (சி-0054)



## கல்யாண மாலை



### இடமாற்ற அறிவித்தல்

*அன்பான வாடிக்கையாளர்களுக்கு*

இலக்கம் 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கிய கல்யாணமாலை அலுவலகம் நாளை வியாழக்கிழமை முதல் (தற்காலிகமாக) இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பழைய வலம்புரி அலுவலகம்) எனும் முகவரியில் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்.

இடமாற்றத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை கல்யாணமாலை அலுவலகத்துக்கு விடுமுறை என்பதை அறியத் தருகின்றோம்.



மேலதிக தொடர்புகளுக்கு :
021 720 1005
076 097 3120



## வினோ நகைப்பூங்கா





உங்கள் தங்க நகைகளை டிஜிட்டல் முறையில் துல்லியமாக தரம் பார்த்து தரச்சான்றிதழ் வழங்கப்படும்

(C-0034)

185, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் கடந்த 24.11.2023 முதல் 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வருகிறது என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.





வினோ நகைப்பூங்கா,
இல. 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5394, 021 222 9494, 074 209 9494


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பெயர்களை மாற்றும் சீனாவின் செயல் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது

### மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர்



(டில்லி)
இடத்தின் பெயரை மாற்றுவதால் அதன் உரிமை மாறிவிடாது. அருணாச்சலப் பிரதேசம் நேற்றும், இன்றும், நாளையும் இந்தியாவின் ஒரு பகுதியாகவே தொடரும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அருணாச்சலப் பிரதேசம் மீது சீனா தொடர்ந்து உரிமை கொண்டாடி வருகிறது. இதனால் கடந்த சில ஆண்டுகளாகவே அம் மாநிலத்தில் எல்லைகளில் உள்ள பல பகுதிகளின் பெயர்களை சீன மொழியில் மாற்றி அறிவித்து வருகிறது.

அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள 30 இடங்களுக்கு சீனா தனது மொழியில் புதிய பெயர்களை வைத்துள்ளது குறித்த கேள்விக்கு பதில் அளித்த மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், "இடத்தின் பெயரை மாற்றுவதால் அதன் உரிமை மாறிவிடாது. அருணாச்சலப் பிரதேசம் நேற்றும், இன்றும், நாளையும் இந்தியாவின் ஒரு பகுதியாகவே தொடரும். நான் உங்கள் வீட்டின் பெயரை மாற்றினால், அது என்னுடையதாகிவிடுமா?. பெயர்களை மாற்றும் சீனாவின் செயல், எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. நாம் எல்லையில் நமது இராணுவத்தை குவித்திருக்கிறோம் என தெரிவித்துள்ளார்.

சீனாவால் மறுபெயரிடப்பட்ட அருணாச்சலப் பிரதேசத்துக்கு சொந்தமான இடங்களின் பட்டியலில் 11 குடியிருப்பு பகுதிகள், 12 மலைகள், நான்கு ஆறுகள், ஒரு ஏரி, ஒரு மலைப்பாதை உள்ளன. இவற்றின் பெயர்களை சீன அரசு சீன மொழியான மாண்டரின் மொழியிலும், அதேபோல் திபெத்திய மொழியிலும் மாற்றியுள்ளது. (நி-5)

## இஸ்ரேல் மேற்கொண்ட வான் தாக்குதலில் தன்னார்வத் தொண்டாளர்கள் பலி

(காசா)
காசா பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்ட வான் தாக்குதலில் உணவு வழங்கலில் ஈடுபட்டிருந்த தன்னார்வத் தொண்டாளர்கள் ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியா, பிரித்தானியா, போலந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.


இதேவேளை 100 தொன் கிலோ கிராம் எடையுடைய உணவுப் பொருட்களை காசாவில் பாதிப்படைந்துள்ள மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதலானது மனிதாபிமான தொண்டு நிறுவனத்திற்கு எதிரான தாக்குதலாக அமைந்துள்ளதாக விமர்சிக்கப்படுகின்றது.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள், யுத்த களத்தில் ஆயுதமாக பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

புனித ரமழான் மாதம் அனுஷ்டிக்கப்பட்டுவரும் நிலையில் மேற்கு நாடுகள் காசாவில் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி வருகின்றன. இருந்த போதிலும் யுத்த மோதல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## இம்ரானின் சிறைத்தண்டனையை நிறுத்தி வைத்த நீதிமன்றம்



(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபிக்கு ஊழல் வழக்கில் விதிக்கப்பட்ட 14 ஆண்டு சிறைத்தண்டனையை நீதிமன்றம் நிறுத்தி வைத்து உத் தரவிட்டுள்ளது.

குறித்த உத்தரவை நேற்று முன்தினம் பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

எனினும், ஏனைய வழக்குகளில் அளிக்கப்பட்ட தீர்ப்புகள் காரணமாக அவர்கள் இருவரும் சிறை யிலிருந்து விடுவிக்கப்பட மாட்டார்கள் என தெரி விக்கப்படுகின்றது.

இம்ரான் கானுக்கும் புஷ்ரா பீபிக்கும் 14 வருட சிறைத்தண்டனை விதித்து இஸ்லா மாபாத் பொறுப்புடைமை நீதிமன்றம் ஜனவரி 31 ஆம் திகதி தீர்ப்பளித்தது.

பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்பாக இத்தீர்ப்பு அளிக்கப் பட்டிருந்தது.

இந்நிலையில் இவர்கள் தலா 10 வருட காலம் அரச பதவிகளை வகிப்பதற்கு தடை விதிக்கப்பட்டதுடன் இருவருக்கும் தலா 787 மில்லியன் பாகிஸ்தான் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

மேலும், இந்த தீர்ப்புக்கு எதிரான இம்ரான் கானின் மேன்முறையீட்டு மனுவை இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், மேற்படி தண்டனைகள் இடை நிறுத்தப் பட்டுள்ளன. (நி-5)

## ஏர்டோகன் தலைமையிலா... உள்ளூராட்சி தேர்தலில்...



(அங்காரா)
துருக்கியில் இரண்டு தசாப்தங்களாக ஆட்சிபுரிந்த ஜனாதிபதி டயிப் ஏர்டோகன் தலைமையிலான அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தலில் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

துருக்கியில் மேயர் உள்ளிட்ட பதவிகளுக்கான உள்ளூராட்சி தேர்தல் வாக்குப்பதிவு இடம் பெற்றது. இந்த நிலையில் சுமார் 60 சதவீத வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில் இஸ்தான்புல் நகரில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்ட இமாமோக்லு முன்னிலை வகிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்தான்புல் மற்றும் அங்...

## பிரித்...

## நீண்ட... காத்தி...

(லண்டன்)
பிரித்தானியாவ...
காமல் வரிசையி...
ஒன்றிற்கு, சராசர...
என பிரித்தானியா...
தெரிவித்துள்ளது...

பிரித்தானியாவில் அவசர காலசிகிச்சை கிடைக்காமல் நோயாளிகள் உயிரிழப்பது பற்றி சமீபத்தில் அவசரகால மருத்துவத்திற்கான ராயல் கல்லூரி ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தானியாவில் ஒரு வாரத்தில் மட்டும்

# ட நேரம் சிகிச்சைக்காக

# திருந்த 268 பேர் உயிரிழப்பு

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

**ாவில், நெடுநேரம் சிகிச்சை கிடைக் யில் காத்திருந்ததில், 2023இல் வாரம் ாசரியாக 268 பேர் உயிரிழந்துள்ளனர் யாவின் தேசிய சுகாதார சேவைத்துறை ாது.**



டது.

இதன்படி, அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அந்த வார்டுக்கு வெளியே நீண்டநேரம் வரை வரிசையில் காத்திருந்து உள்ளனர்.

இப்படி காத்திருக்கும் நேரம் அதிகரித்தும், உரிய நேரத்தில் சரியான சிகிச்சை கிடைக்காமல் போயும், கடந்த ஆண்டில் எண்ணற்றோர் மரணமடைந்துள்ளனர்.

இதன்படி, நீண்டநேரம் சிகிச்சை கிடைக்காமல் காத்திருந்து, கடந்த ஆண்டு வாரம் ஒன்றிற்கு, சராசரியாக 268 பேர் உயிரிழந்து உள்ளனர் என்ற அதிர்ச்சி தகவல் தெரியவந்துள்ளது.

இந்த அறிக்கையின்படி, நடப்பு ஆண்டு

பெப்ரவரியில் மட்டுமே, பிரித்தானியாவில் மருத்துவமனைகளின் அவசர கால பிரிவில் 12 மணிநேரத்திற்கும் கூடுதலாக காத்திருந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆயிரம் என தெரிய வந்துள்ளது. (நி-5)

## ான அரசாங்கம் ல் பின்னடைவு



இடம் ...மார் ...கள் ...யில் ...யரசு ...இமா ...தாக ...அங்

காரா ஆகிய நகரங்களில் குடியரசுக்கட்சி அமோக வெற்றியீட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 81 மாகாணங்களில் 36 இடங்களில் குடியரசுக்கட்சி முன்னிலை வகிப்பதாக சர்வதேச ஊடகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான குடியரசுக்கட்சி 15 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள நிலையில் ஜனாதிபதி டயிப் ஏர்டோகன் தேர்தலில் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளார். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக ஆட்சிபுரிந்த டயிப்ஏர்டோகன் எதிர்கொண்ட பாரிய தோல்வியாக இது கருதப்படுகின்றது. துருக்கியின் ஜனாதிபதி டயிப் ஏர்டோகன் கடந்த 1994 ஆம் ஆண்டு தனது 70 ஆவது வயதில் இஸ்தான்புல் மேயர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றி பெற்றதன் ஊடாக அரசியலுக்குள் பிரவேசித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் தாக்குதல்

## 11 பேர் பலி



(டமாஸ்கஸ்) ... சிரியா நாட்டின் தலை... ஈரான் தூதரகம் மீது, இஸ்ரேல் திடீரென வான்வழித் தாக்குதல் நடத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சம்பவத்தில் ஈரானின் ஆயுத படைகளில் ஒன்றான இஸ்லாமிய புரட்சி காவல் படையை சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டனர்.

இதனை ஈரான் அரசும் உறுதி செய்துள்ளது.

எனினும், இஸ்ரேல் ஏவுகணைகள் தாக்குதல் நடத்தியதில், ஈரான் புரட்சி படையினர் உட்பட 11 பேர் உயிரிழந்தனர் என்றும் ஈரான் தூதரகத்திற்கு அடுத்துள்ள கட்டடம் ஒன்று தாக்கி அழிக்கப்பட்டது என்றும் பிரிட்டனை அடிப் படையாக கொண்ட சிரியாவின் மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலில் உயிரிழந்த வர்களில் 8 பேர் ஈரானியர்கள். 2 பேர் சிரிய நாட்டினர் மற்றும் லெபனான் நாட்டை சேர்ந்த ஒருவர் ஆவர். இதற்கு பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் தெரிவித்துள்ளது. (நி-5)

# உயிர்ப்பொருளாதாரத்தின் அவசியமும் பயன்பாடும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உயிர்ப் பொருளாதாரத்தில் (Bioeconomy) இத்தேசத்தை உணவுப் பாதுகாப்புடனான நேர்மை எழுச்சியுடன் கட்டியெழுப்ப முடியும் என்பதனை உணவு மற்றும் விவசாய தாபனம் எடுத்துக்கூறியிருக்கின்றது. இந்த உயிர்ப் பொருளாதாரத்தில் இது எப்படி முடியும் என்பதனை இயற்கையுடனான வாழ்க்கை முறையை உதாரணமாக காட்டி விளக்கியிருக்கின்றார்கள். சரி ஒரு கணம் நாம் வாழக்கூடிய வாழ்க்கை முறையை நினைத்துப் பார்ப்போமா?

எமக்குத் தேவையான ஊட்டச்சத்தான சமனான உணவு இயற்கை முறையில் கிடைக்கின்றதென்பதனை உறுதி செய்து கொள்வோம். நாம் உண்ணுகின்ற உணவில் கழிவு அல்லது தேவையற்றவை மிகவும் குறைவாக இருப்பதனையும் கவனித்துக் கொள்வோம். உண்ணுகின்ற உணவாக உருவாகும் போது அதில் வரும் பக்கவிளை பொருட்களை பயனுள்ள இடுபொருளாக மாற்றிக் கொள்வோம். நாம் மாற்று உயிர் பொருட்களை பயன்படுத்துவதன் மூலம் அசேதன பீடைநாசினிகள் மற்றும் அசேதன பசளைகளை இயன்றவரை தவிர்த்துக் கொள்வோம். எமது தேவைக்காக நாம் புதைபடிவங்கள் (Fossils) மற்றும் பிளாஸ்ரிக் வகைகளை குறைந்தளவில் அல்லது தேவை கருதி அளவுடன் பயன்படுத்துவோம்.

உயிர்ப்பொருட்களான பூஞ்சணம். மரம் மற்றும் கடல்வாழ் தாவரங்கள் குறிப்பாக கடற் சாதாளைகள். நீர்வாழ் தாவரங்கள் என்பனவற்றை இடு பொருட்களாக கொண்ட தொழிற்துறைக்கு தேவையான புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவோம். மண்ணினை. தாவரங்களை உயிர்ப்புடன் வைத்திருக்கும் நன்மைதரும் நுண்ணங்கிகளை இனங்கண்டு மேலும் இனப்பெருக்கி அவற்றின் பயன்பாட்டை முழுவதுமாக உணரச் செய்வதோடு மட்டுமல்லாது அவற்றை முழு அளவில் பயன்படுத்தவும் தலைப்படுவோம். உள்ளூர் மக்களுக்கான உருவாக்கமாக இது மாறும் போது அதனது தனித்துவமே தனி. இதன் மூலம் உணவுப் பண்டங்களின் போக்குவரத்து இலகுவாக்கப்படும். நம்பிக்கையுள்ள வணிகம் மேன்மையுறுவதுடன் அதனை தக்கவைத்துக் கொள்ளவும் முடியும். என்ன யோசிக்கின்றீர்கள்? இவையெல்லாம் சாத்தியமா என்றல்லவா ?. நம்பினால் நம்புங்கள். இவையனைத்தும் தற்போது எமக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் நாம் இதனை உணரத் தலைப்படவில்லை. இதனை உயிர்ப்பொருளாதாரம் என அழைப்பார்கள்.

இவ்வாறான உயிர்ப் பொருளாதாரத்தினை முன்னோக்கி நகர்த்தும் பாரிய பொறுப்பில் உலக உணவு மற்றும் விவசாயதாபனம் ஈடுபட்டிருக்கும் இந் நேரத்தில் நாமும் அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு எமது மக்களுக்கான உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம்
1. உணவுப்பாதுகாப்பில் ஏற்படும் (Securing from food insecurity) சரிவை சீர் செய்து கொள்வதுடன் அதனை தக்கவைத்துக் கொள்ளலாம். அத்துடன் ஊட்டச் சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்யவும் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளது. உணவில் தேவையானளவு ஊட்டச்சத்து அவசியம் தேவை. ஊட்டச்சத்து குறைபாடு காணப்படின் அது உடல் நலிவுற்று நோயுருவாக்கலை நோக்கிய தாகிவிடும்.

2. இதன் மூலம் காபன் வெளியிடுவது (Reducing carbon emmission) குறைக்கப்படும். காபனின் அளவுவெளியிடுவது எமது சூழலுக்கு மிகவும் ஆபத்தானதாகும். கரியமிலவாயுவின் வெளியேற்றம் அதிகரிப்பது ஒட்சிசன் காபனீரொட்சைட்டு வீதத்தில் பாதிப்பினை ஏற்படுத்திவிடும். இதனால் இந்த சமனிலை குழப்பத்தை சீர் செய்வதற்கு உயிர்ப் பொருளாதாரத்தை முழுவதுமாக நடைமுறைப்படுத்தல் அவசியமாகின்றது.



3. பல்வகைத் தன்மையை பாதுகாத்தல் (Conserving biodiversity) மிகவும் அவசியமானதாகும். எமக்கிருக்கின்ற வளங்களில் மிக முக்கியமானது பல்வகைத் தன்மையினுள் ஒன்றிணைக்கப்பட்ட பல வகை தாவரங்கள். நுண்ணங்கிகள் மற்றும் விலங்கினங்கள் ஆகும். இவ்வாறான பல்வகைத்தன்மையை பேணும் போது ஒன்றில் தங்கியிருத்தல் என்பதிலிருந்து மாறி பல வகையான அங்கிகள் நுண்ணங்கிகளை பயன்படுத்தும் நிலைமை ஏற்படுவதோடு அவற்றிலிருந்து பயன்பாடும் அதிகளவில் கிடைக்கும். பல்வகைத் தன்மை பல பிரச்சினைகளுக்கு தீர்வாகவும் அமையும். பல் வகைத் தன்மையை தக்கவைத்தல் உயிர்ப்பொருளாதாரத்தில் மிக முக்கியமான அணுகுமுறையாகும்.

5. நச்சுக் கழிவுகளை அகற்றுதல் (Removal of toxic wastes) என்பது உயிர்ப் பொருளாதாரத்தில் முக்கியமான இன்னொரு நிலையாகும். அன்றாட பயன்பாட்டில் பல நச்சுக் கழிவுகள் உருவாகின்றன. இவற்றை முறையாக கழிவுமுகாமைத்துவம் ஊடாக அகற்றுதல் நன்மை தரும். குறிப்பாக நுண்ணங்கிகளைப் பயன்படுத்தி நச்சுக் கழிவுகளை பிரிகையடையச் செய்து அவற்றை பாதுகாப்பாக அகற்றல் வேண்டும். நச்சுக் கழிவுகள் சூழலை சென்றடைந்தால் அது அனைத்து நன்மை தரும் அங்கிகள் மற்றும் நுண்ணங்கிகளுக்கு பாதகமாகவே அமைந்துவிடும்.

6. கிராமிய சமூகத்தை கட்டியமைத்தல் (Building Rural communities) அதற்கு மேலும் வலுவூட்டும். கிராமிய கட்டமைப்பில் உயிர்ப் பொருளாதாரத்தை முழு அளவில் பயன் படுத்து வதற்கோ மாறாக அதனை மேன்மையடையச் செய் யவோ வழிகளுண்டு. கிராமிய சமூகத்தின் உரு வாக்கம் ஒன்றிணைந்த குழுச் செயற்பாட்டுக்கு மேலும் வலுச் சேர்க்கும். மக்களிடையே நல்ல புரிந்துணர்வும் குழுவாக இணைந்து செயற்படும் மனநிலையும் உருவாகும். இந்த ஆக்கபூர்வமான இணைப்பு இவ்வாறான திட்டங்களை செயற்படுத்த மிகமிக அவசியமானதாகும். உளமதில் புரிந்துணர்வு உருவாகி மனதளவில் அனைவரும் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். இது உயிர்ப் பொருளாதாரத்தினை மேலும் வலுவூட்டும்.

ஆக மொத்தத்தில் உயிர்ப் பொருளாதாரம் இயற்கை வழி வாழ்க்கை என்பதற்கு மேலாக இயற்கையைப் பேணுவதற்காக நாம் செய்யும் கைம்மாறு ஆகும். எமது வாழ்க்கையின் சீர்மைக்கு இயற்கை தரும் அனைத்து வளங்களையும் நாம் பயன்படுத்தி அதனை பேணிக்காப்பதுடன் அதிலுள்ள வளங்களை அதீத பயன்பாட்டுக்கும் உள்ளடக்கலாம். என்று நாம் எமது சூழலை நேசிக்கின்றோமோ. இயற்கைக்கு அங்கீகாரம் கொடுக்கின்றோமோ அன்று எமக்கான வாழ்க்கையின் வசந்த வாசல் திறக்கப்பட்டதெனலாம். வாழ்ந்து பார்க்க ஆசைப்படும் அனைவருக்கும் உயிர்ப் பொருளாதாரம் என்னும் அவர் தம் கையிலிருக்கும் சாவி நல்வாழ்வின் வாசலை திறந்துவிடும். முயற்சியுண் [illegible]

# இன்று ஒரு தகவல் 84



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## காகம்

யாராவது திருப்பித் திருப்பி சத்தம் போட்டுக் கொண்டிருந்தால் "ஏண்டா இப்படி காக்கா மாதிரி கத்துகிறாய்?" என்று சொல்லுவது உண்டு. அப்படி சொல்லுகின்றவரும் சத்தம் போட்டுத்தான் சொல்லுவார். அப்படி கத்துகிறவர்கள் எல்லாம் அறிவு இல்லை என்று சொல்ல முடியாது! ஏன் என்றால்... 'பறவை இனத்திலேயே அதிக அறிவுள்ளது காக்கை தான்' என்று விலங்கியல் நிபுணர்கள் சொல்லுகின்றார்கள்!

அவர்கள் சொல்லுகிறது உண்மையாகத்தான் இருக்கும்! ஏன் என்றால் காகத்தைப் போல் காக்கா புடிக்கணும் என்கிற அவசியம் அவர்களுக்கு இல்லை. இப்போது நம்மளைப் பார்த்து ஒருவர், சார் உங்களுக்கு அறிவு ஜாஸ்தி! என்றால் நாம் சந்தேகப்படலாம், அதிலே ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால்... காக்கா விடயத்திலே சந்தேகப்பட வேண்டியதில்லை!

காக்கை இனத்திலே 32 வகை உண்டு. உலகம் பூராகவும் காக்கைகள் பரவி இருக்கிறது. முக்கியமாக நாம் 5 வகையான காக்கை இனங்களைப் பார்க்கலாம்.

அதிலே இரண்டு வகையை 'அண்டங் காக்கை' என்று சொல்லுகின்றோம். மற்ற மூன்று வகையை வெறுமனே 'காக்கைகள்' என்று சொல்லுகின்றோம். இந்த எல்லா காக்கையும் கறுப்பு நிறம் தான் யாராவது இங்கே வெள்ளைக் காக்கா பறந்ததைப் பார்த்தேன் என்று சொன்னால் அவர் கொக்கு பறந்ததைத் தான் பார்த்து விட்டு சொல்லுகிறார் என்று அர்த்தம்.

காகத்தினுடைய நீளம் எல்லாம் சுமாராக 16 அங்குலத்திலேயிருந்து 20 அங்குலம் வரைக்கும் இருக்கும். அண்டங்காக்கை நீளம் 26 அங்குலம் வரைக்கும் இருக்கும்.

சாதாரண காகம் எல்லாம் மனிதர்கள் வாழ்கின்ற பகுதிகளிலேயே வசிக்கும். மரத்திலே பாறைப் பொந்தில் எல்லாம் காக்கா கூடுகளைப் பார்க்கலாமே! வீட்டிலே நாய், பூனை இதையெல்லாம் வளர்க்கிறோம் அல்லவா இது மாதிரி சில பேர் காக்கா வளர்க்கிறதும் உண்டு .

அண்டங்காக்காவிற்கு அறிவு அதிகம். கறுப்பாக இருந்தாலும் பளபளப்பாக இருக்கும். சின்ன வார்த்தைகளைச் சொல்லி கொடுத்தால் கிளி மாதிரி திருப்பி சொல்லும். உலகத்திற்கும் முதல் முதலிலே நோவாவின் படகிலிருந்து அனுப்பப்பட்ட பறவை அண்டங்காக்கா தான் என்று பைபிள் சொல்கிறது. காடுகளிலும் மலர்களிலும் இது அதிகமாக வளரும்.

இது தன்னுடைய கூட்டை உயரமான மரம் பாறை உச்சியிலே தான் கட்டும். உயர்ந்த இடத்தில் இருக்க வேண்டும் என்று ஆசை . ஒரு பெண் காக்கை மூன்றிலே இருந்து எட்டு முட்டைகள் வரை இடும். இந்த முட்டைகள் இலேசான பச்சை நிறமாக இருக்கும். பெண்களின் கூந்தலை நமது கவிஞர்கள் எல்லாம் மேகத்தோட நிறத்திற்கு ஒப்பிடுவது வழக்கம். மேல் நாட்டு கவிஞர்கள் எல்லாம் காகத்தோட நிறத்தை ஒப்பிடுவது வழக்கம். அதுவும் அண்டங்காக்கா நிறத்தை தான் கூந்தலுக்கு உவமையாக சொல்லுவார்கள்.

காகத்தை எல்லாம் பெண்களோட கூந்தலுக்கு ஒப்பிடுவதோடு வைத்துக்கொள்வது தான் பாதுகாப்பு. பெண்களோட ஒப்பிட ஆரம்பித்தால் நிலைமை விபரீதமாக போய்விடும். நீ மயில் மாதிரி இருக்கிறாய் என்றால் சந்தோசப்படுவார்கள். நீ காக்கா மாதிரி இருக்கிறாய் என்றால் சண்டைக்கு தான் வருவார்கள் அதனால் உவமை சொல்கின்று போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

போர் நடத்துகின்ற போது ராணுவத்தளங்களிலேயே சென்ட்ரி போடுவார்களே இரவு நேர காவலுக்கு. அது மாதிரி சில காகங்கள் இரவில் சென்ட்ரியாக வேலை செய்யுமாம். ஏதாவதுஆபத்து வந்தால் கத்திச் சத்தம் போட்டு மற்றதை எழுப்பி விடும்.

தாவரங்களை அழிக்கக் கூடிய பூச்சிகளை காகம் சாப்பிடுவதால் அது நமக்கு உதவி செய்கிறது. உலகம் முழுவதும் காகம் இருக்கிறது ஆனால் நியூசிலாந்தில் மட்டும் காகம் இல்லையாம். அதோட இந்தியாவில் கொடைக்காணலிலேயும் காகம் இல்லை என்று ஒரு நண்பர் சொன்னார். ஒரு விலங்கியல் பேராசிரியர் காகங்களை பிடித்து கொண்டு போய் கொடைக்காணலில் விட்டு பார்த்தாராம். அது எல்லாம் திரும்பி கொண்டு கீழே வந்து விட்டுதாம். இதற்கு விஞ்ஞான பூர்வமான காரணம் என்ன என்று எனக்கு தெரியவில்லை. யாருக்காவது தெரிந்தால் சொல்லுங்கள். அது ஒரு நாள் தகவலுக்கு உதவும். காகத்தை பற்றி இவ்வளவு சொல்லியாச்சு.

காக்கா பிடிக்கிறது எப்படி?

வேண்டாம்.... நமக்கு எல்லாம் தெரிந்த விடயத்தைப் பற்றி நான் திரும்பவும் சொல்லி கொண்டு இருந்தால் அது நன்றாக இருக்காது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னேரிக்குளம் - முக்கொம்பன் வீதியை சீர்செய்யுமாறு கிராம மக்கள் கோரிக்கை


(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி முக் கொம்பனில் இருந்து கரைச்சி வன்னேரிக்குளம் செல்லும் வீதியினை புனரமைக்குமாறு இரு கிராமங்களின் மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வன்னேரிக்குளம் கிராமத்தில் 500 குடும்பங்களும் முக் கொம்பன் கிராமத்தில் 700 வரையான குடும்பங்களும் வாழும் நிலையில் இரு கிராமங்களுக்கும் இடையிலான வீதி பற்றைகள் வளர்ந்து மூடப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் இரு கிராமங்களுக்கும் இடையில் போக்குவரத்துக்கள் நடைபெற்றன.

வன்னேரிக்குளத்தில் இருந்து முக்கொம்பன் வழியாக பூநகரி சென்று யாழ்ப்பாணம் வரை மக்கள் பயணிக்கக் கூடி யதாக இருந்தது. தற்போது குறித்த வீதியைச் சீர்செய்வதால் பிற இடங்களில் இருந்து வன்னேரிக்குளம். முக்கொம்பன் மகாவித்தியாலயத்திற்கு வருகை தரும் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் நன்மையடைவார்கள். வன்னேரிக்குளத்தின் உற்பத்திப் பொருட்களை இலகுவாக யாழ்ப்பாணத்திற்கு எடுத் துச் செல்லக் கூடிய நிலையும் ஏற்படும். இதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் விரைந்து எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-350)

## கிளி.பொதுச் சந்தையின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு



(தருமபுரம்)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் ஏற்பட்டுள்ள தண்ணீர் பிரச்சினை கரைச்சி பிரதேச சபையின் செயலாளரின் தலையீட்டினால் உடனடியாக தீர்வு காணப்பட்டது.

புதிதாக குழாய் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு சந்தை பகுதியில் ஏற்பட்டுள்ள தண்ணீர் பிரச்சினை உடனடியாக தீர்வு காணப்பட்டுள்ளதுடன் சந்தைப் பகுதியில் ஏற்ப்பட்ட சுகாதார சீர்கேடுகளும் சீர் செய்யப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து சந்தைப் பகுதியை சுத்தமாக பேணுவதற்கு நடவ டிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் கரைச்சிபிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (நி-5-316)

## முத்தையன்கட்டு குளம் சிறுபோகத்திற்காக திறப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு முத்தையன் கட்டுக் குளம் சிறுபோக நெற் செய்கைக்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து விடப்பட்டுள்ளது. 15 நாட்களுக்கு முன்னர் முத்தையன்கட்டுக் குளத்தின் கீழான வான் பயிர்களுக்கும் கால்நடைகளுக்கும் நீர் தேவை என்ற நிலையில் நீர் வழங்கப்பட்டது. இந்நிலையில் முத்தை யன்கட்டுக் குளத்தின் கீழான 3,800 ஏகர் வரையான சிறுபோக நெற் செய்கைக்காக தற்போது இக் குளம் திறந்து விடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முக்கிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக முத்தையன்கட்டுக் குளம் காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படுகின்ற முத்தையன்கட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவு, வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவின் குளங்களின் கீழ் சிறுபோக நெற்செய்கைக் கூட்டங்கள் நடைபெற்று கூட்டத் தீர்மானங்களின் படி தற்போது குளங்களின் நீர் சிறுபோக நெற்செய்கைக்காக திறந்து விடப்படும் நிலையில் முத்தையன்கட்டுக் குளத்தின் நீரும் திறந்துவிடப்பட்டுள்ளது.(நி-5-350)

## அமைக்கப்படும் யானை வேலிகளை பூரணப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தட்டையமலை கிராமத்திற்குள் யானைகள் வருவதைத் தடுப்பதற்கு என அமைக்கப்பட்டு வரும் யானை வேலிகள் முழுமை பெறாததன் காரணமாக கிராம மக்கள் யானைகளினால் பயிர் அழிவுகளை தொடர்ச்சியாக சந்தித்த வண்ணம் உள்ளனர்.


ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் ஏற்பாட்டில் தட்டையமலை கிராமத்தின் மூன்று பக்கங்களும் யானை வேலிகள் அமைக்கப்பட்ட போதிலும் யானைகள் வருகின்ற ஒரு பக்கம் யானை வேலி அமைக்கப்படாததன் காரணமாக யானைகள் தொடர்ச்சியாக கிராமத்திற்குள் வருகின்றன.

இது தொடர்பாக யானை வேலிகளை முழுமையாக அமைத்துத் தாருங்கள் என ஒட்டுசுட்டான் கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுத்தும் யானை வேலிகள் அமைக்கப்படாமல் உள்ளன. கிராமத்தின் மூன்று பக்கமும் யானை வேலிகள் அமைக்கப்பட்ட போதிலும் ஒரு பக்க வேலி அமைக்கப்படாததன் காரணமாக யானைகள் வருவதனால் பயிர் அழிவுகள் ஏற்படுவதாகவும் யானை வேலியினை முழுமைப்படுத்துவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தட்டையமலை கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(நி-5-350)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3079

குமரன்




கமலி




அகிலா




தரள்




கௌசி




லட்சுமி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 445



கந்தவர்கள் இன்னிசைக் கருவிகளிலிருந்து இனிய சுவரங்களை எழுப்பிக் கொண்டு அவள் பின்னோடு பறந்து வந்தார்கள். அப்ஸர் ஸ்திரீகள் நடனமாடிக்கொண்டு வந்தார்கள். ஊர்வலம் சென்ற வான வீதியின் இருபுறமும் நட்சத்திர தீபங்கள் சுடர் விட்டு ஜகஜ் ஜோதியாகப் பிரகாசித்தன! இப்படிப் பல பல யுகங்கள் சென்றன!

இதோ, ஐராவதத்தின் வேகம் குறைகிறது. திடீரென்று அது பூலோகத்துக்கு வந்துவிட்டது. ஈழ நாட்டின் காடுகளுக்கே வந்துவிட்டது. யானைப்பாகன் குனிந்து அதன் மத்தகத்தைத் தட்டிக்கொடுக்கிறான். அதன் காதண்டை ஏதோ சொல்கிறான். சேச்சே! அவன் யானைப்பாகன் அல்ல தேவேந்திரன் அல்லவா? இல்லை இளவரசர் அல்லவா இவர்?

நாலுபுறமும் மரங்கள் சூழ்ந்த ஒரு குளத்தின் கரையிலே வந்து யானை அமைதியாக நின்றது.

பூங்குழலி சிறிது கவலையுடன், இளவரசரை வரவேற்று உபசரிப்பதற்காக ஜனக் கூட்டம் வந்து அக்கரையில் நிற்கிறதோ என்று பார்த்தாள். இல்லை! பின்னால் குதிரைகள் தொடர்ந்து வருகின்றனவோ என்று பார்த்தாள் அதுவும் இல்லை! குளத்தைப் பார்த்தாள், அதில் பூத்திருந்த அல்லி மலர்களும் செங்கழுநீர்ப் பூக்களும் அப்படி அப்படியே கொடிகளுடன் பிய்த்துக் கொண்டு வந்தன. அவளை நாலு புறமும் சூழ்ந்து கொண்டன. கன்னங்களிலும் தோள்களிலும் உடம்பு முழுவதும் அந்த மலர்கள் அவளைத் தழுவிக் கொண்டு மகிழ்ந்தன. பின்னர் அப்பொல்லாத மலர்களின் கொடிகள் அவளை இறுக்கிப் பிடித்து அமுக்கி மூச்சுத் திணறச் செய்தன. உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கி அப்பூங்கொடிகளின் பிடியிலிருந்து பூமிக்குத் தலைகீழாய் வந்தது போலிருந்தது. யானை தன் பெரிய முன்னங்கால்களை மடித்துக் குனிந்தது. பிறகு பின்னங் கால்களையும் மடித்துக்கொண்டு தரையில் படுத்தது. இளவரசர் யானையின் கழுத்திலிருந்து கீழே குதித்தார். "பூங்குழலி! யானை மேலிருந்து இறங்குவதற்கு மனம் இல்லையா?" என்றார்.

பூங்குழலி உடம்பைச் சிலிர்த்துக்கொண்டு தன் நினைவை அடைந்தாள். "ஐயா! சொர்க்கத்திலிருந்து பூமிக்கு வருவது கஷ்டந்தானே?" என்று முணு முணுத்துக்கொண்டு இறங்கினாள்.

யானை மீண்டும் எழுந்து குளக்கரையிலிருந்த ஒரு பெரிய மரத்தின் கிளையை ஒடித்துத் தன் அகண்ட வாய்க்குள்ளே திணித்துக் கொண்டது.

அருள்மொழிவர்மர் குளத்தின் கரையோரமாகச் சென்று உட்கார்ந்தார். தயங்கி நின்ற பூங்குழலியையும் அருகில் வந்து உட்காரச் சொன்னார்.

தெளிந்த நீரில் பூங்குழலியின் முகம் பிரதிபலித்தது. யானையின் ஓட்டத்தினாலும் அச்சமயம் நேர்ந்த உள்ளக் கிளர்ச்சியினாலும் அவள் முகம் செக்கச் செவேலென்று ஆகிச் செங்கழுநீர்ப் பூவுடன் போட்டியிட்டது.

நீரில் தெரிந்த அவள் முகத்தைப் பார்த்த வண்ணம் இளவரசர், "சமுத்திர குமாரி! உன்னை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது!" என்றார்.

அல்லி மலர்களும், செங்கழுநீர்ப் பூக்களும் மீண்டும் இடம் பெயர்ந்து வந்து பூங்குழலியின் உடல் முழுவதும் முத்தமிட்டன! "உன்னை ஏன் எனக்குப் பிடித்திருக்கிறது தெரியுமா?" என்று இளவரசர் கேட்டார்.

பூங்குழலியின் கண் முன்னால் வானமும் வையமும் குளமும் அதிலுள்ள மலர்களும் குளக்கரையிலிருந்த மரங்களும் சுழன்று சுழன்று வந்தன.

"எனக்குத் தெரிந்த ஒவ்வொருவரும், நான் அவர்கள் இஷ்டம்போல் நடக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். நீ ஒருத்தி மட்டும் என் விருப்பத்தின்படி நடக்கச் சந்தோஷத்துடன் சம்மதித்தாய்! இந்த உதவியை என்றும் மறக்க மாட்டேன் சமுத்திர குமாரி!"

பூங்குழலியின் உடம்பு ஒரு யாழ் ஆயிற்று. அவளுடைய நரம்புகள் எல்லாம் யாழின் நரம்புகள் ஆயின. பொன் வண்ண விரல்கள் அந்த நரம்புகளை மீட்டித் தேவகானத்திலும் இனிய இசையை எழுப்பின.

(தொடரும்...)




# சிறுவர் அரங்கம்

## திருந்திய திருடன்!

முன்னொரு காலத்தில் திருடன் ஒருவன் இருந்தான். தன் மகன் ராசப்பாவையும் திருட்டுத் தொழிலில் வல்லவனாக வளர்த்தான். திருடன் இறக்கும் நேரம் வந்தது.

"மகனே! நீ திருட்டுத் தொழிலில் மேலும் மேலும் வல்லவனாக வேண்டும். நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக்கொள்.

எங்கேனும் பக்திச் சொற்பொழிவு, இசை நிகழ்ச்சிகள் நடந்தால் அங்கு போகாதே. நீ அங்கே இருக்க



வேண்டிய சூழ்நிலை வந்தால் ஏதும் காதில் விழாதபடி உன் காதுகளைப் பஞ்சுகளால் அடைத்துக் கொள். இல்லையெனில் அந்த நல்ல வார்த்தைகள் உன் மனதை மாற்றம் அடையச் செய்துவிடும்" என்றான்.

"அப்படியே செய்கிறேன்," என்றான் மகன். தந்தையின் அறிவுரைப் படியே நடந்து வந்தான் ராசப்பா.

ஒரு முறை திருடிவிட்டு திரும்பிக் கொண்டிருந்தான். ஓரிடத்தில் மக்கள் கூட்டமாக இருப்பதைக் கண்டான். என்ன நடக்கிறது என்பதை அறிவதற்காக அருகில் சென்றான்.

அங்கே மகாவீரர், ஒரு மேடையில் அமர்ந்து மக்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தார். தன் தந்தை சொன்னது உடனே நினைவுக்கு வந்தது. தன் இரு கைகளாலும் காதுகளைப் பொத்திக் கொண்டு அங்கிருந்து நடக்கத் தொடங்கினான்.

அப்பொழுது முள் ஒன்று அவன் காலில் குத்தியது. குனிந்த அவன் தன் ஒரு கையால் முள்ளைப் பிடுங்கிவிட்டு மீண்டும் காதைப் பொத்திக் கொண்டான்.

"தேவர்களுக்கு நிழல் விழாது. அவர்கள் கால்கள் நிலத்தில் படியாது" என்று மகாவீரர் பேசியது அவன் செவியில் விழுந்தது.

சில நாட்களில் முக்கிய திருட்டு ஒன்றைச் செய்த போது வீரர்களிடம் சிக்கிக் கொண்டான். அவன் செய்த திருட்டை எல்லாம் அறிய வீரர்கள் அவனை அடித்துத் துன்புறுத்தினர். கல்லுளி மங்கனான அவனோ வாய் திறக்கவே இல்லை. அவனிடம் இருந்து உண்மையை அறிய அதிகாரிகள் சூழ்ச்சி செய்தனர். மயக்க மருந்து தந்து அவர்கள் அவனை ஓர் அழகான பூஞ் சோலையில் கிடத்தினர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே
> செய்தற் கரிய செயல்.
>
> - திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்களவர்கள் என்பதற்காக அவர்களை எதிர்ப்பது சரியா?

வட மாகாண சுகாதாரப் பணிப்பாளராக மருத்துவர் வி.சி.எஸ்.டி பத்திரன நியமிக்கப்பட்டுள்ளார் என்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பிரஸ்தாப மருத்துவர் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர் என்பதால், குறித்த விடயம் பேசுபடுபொருளாயிற்று.

சிங்கள இனத்தைச் சேர்ந்த மருத்துவர் ஒருவரை வட மாகாண சுகாதாரப் பணிப்பாளராக நியமிப்பது நியாயத்துவமுடையதல்ல என்ற வாதம் முன்வைக்கப்படலாம்.

ஆனால், குறித்த மருத்துவர் தனது பதவியைப் பொறுப்பெடுத்து தனது பணியை எங்ஙனம் ஆற்றுகிறார் என்பதை அவதானிப்பதுதான் இங்கு பொருத்தமானது.

ஏனெனில் மிகச்சிறந்த சிங்கள அதிகாரிகள் இந்த நாட்டில் உள்ளனர்.

ஒரு காலத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபராக லயனல் பெர்னாண்டோ என்பவர் கடமையாற்றியிருந்தார்.

அவருடைய சேவை இன்னமும் நம் மக்களால் நினைவுகூரப்படுகிறது. அந்தளவுக்கு யாழ்.மாவட்ட மக்களோடு மக்களாக அரச அதிபர் லயனல் பெர்னாண்டோ வாழ்ந்தார்.

எனவே வட மாகாணத்துக்கு சிங்கள அதிகாரிகளை, மருத்துவர்களை நியமிக்கும்போது; சிங்களவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக அவர்களை எதிர்க்க வேண்டும் என நினைப்பது மிகவும் தவறான எண்ணப்பாடாகும்.

இதற்குக் கடந்த கால நிர்வாகங்கள் மிகச் சிறந்த அனுபவங்களாக உள்ளன.

உண்மையில் வடமாகாணத்தில் சிங்களவர்கள் உயர் அதிகாரிகளாகக் கடமையாற்றும்போது, அவர்கள் வடக்கு மாகாணத்தின் தேவைகளை அரசாங்கத்திடம் வலியுறுத்தி அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

இதுதவிர, பொதுவில் தமிழ் அதிகாரிகளில் கணிசமானவர்கள் எதிர்மறைச் சிந்தனையுடையவர்கள். பழிவாங்கும் மனநிலை கொண்டவர்கள். எனவே அவர்களை அணுகுவதும் அவர்களிடம் இருந்து சேவைகளைப் பெறுவதும் சாத்தியமாகா.

இதற்கும் மேலாக, அவர்கள் தமது பதவியைப் பாதுகாப்பதிலும் தங்களை அரச விசுவாசிகளாகக் காட்டிக் கொள்வதிலுமே கவனம் செலுத்துவர்.

மாறாக, மக்களின் குறைகளைத் தீர்ப்பதிலும் பொதுமக்கள் முன்வைக்கின்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலும் சம்பந்தப்பட்ட தமிழ் அதிகாரிகள் கவனம் செலுத்தாமல் அதனைத் தட்டிக் கழிப்பர் என்ற கருத்தியல் கடந்த காலப் பட்டறிவாகியுள்ளது.

இதை நாம் கூறும்போது, தமிழ் அரச அதிகாரிகள் எல்லோரும் அப்படியானவர்கள் என்று யாரும் மதிப்பீடு செய்துவிடக்கூடாது.

நம்மவர்களிலும் ஆற்றல், செயற்திறன் உள்ளவர்கள் உண்டு.

இருந்தும் ஒரு சிங்களவர் தமிழர் பகுதியில் உயர் அதிகாரியாகப் பணியாற்றும்போது, அவர் தமிழ் மக்களுக்கு விசுவாசமாகச் செயற்படுவதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருப்பார் என்பது நடைமுறைக் கோட்பாடு.

ஆக, இவர்கள் அரசாங்கத்துக்கு விசுவாசமாகவும் அவர்கள் எங்களுக்கு விசுவாசமாகவும் இருப்பர் என்ற அடிப்படையில், சிங்களவர் என்று பார்க்காமல், உச்சமான சேவையை நேர்மையாக வழங்குதல் என்ற வகைமையில் சீர்தூக்கி ஆராய்ந்து முடிவு எடுப்பதே தக்கார் செயலாகும்.

# வடக்கு- கிழக்கு உட்பட பல பகுதிகளில் இன்று வெப்பநிலை மேலும் உயர்வடையும்

நாகமுத்து பிரதீபராஜா

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் இன்று முதல் வெப்பநிலை மேலும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுவதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இன்று முதல் வடக்கு மாகாணத்தின் வவுனியா, மாங்குளம், முறிகண்டி, நட்டாங்கண்டல், துணுக்காய், ஓமந்தை, கரிப்பட்ட முறிப்பு, சின்னத்தம்பனை, பாலைப்பாணி, மூன்று முறிப்பு, ஐயன்குளம், மடு,கீரி சுட்டான், தட்டாங்குளம், பகுதிகளில் பகல் காலை 10 மணி முதல் மாலை 3.30 மணிவரை பகல்பொழுது வெப்பநிலை 41 பாகை செல்சியஸ் இனை அண்மிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக வடக்கு மாகாணத்தின் உள்நிலப்பகுதிகளின் பல இடங்களில் வெப்ப அலை வீசுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

வெப்பச்சலனம் காரணமாக ஆங்காங்கே ஒரு சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்கு பின்னரும் காலை 7 மணிக்கு முன்னரும் மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

ஆனாலும் இம்மழை அதிகரிக்கும். வெப்ப நிலையின் பாதிப்புக்களை தற்காலிகமாக தணித்து குறுகிய காலத்திற்கு மட்டுமே சௌகரியமான வானிலையை உருவாக்கும். எனவே, அதிகரிக்கும் வெப்ப நிலை, வெப்ப அலை தொடர்பிலும் எச்சரிக்கையாக இருப்பது சிறந்தது. அதிகரித்த வெப்பநிலையை கருத்தில் கொண்டு எமது அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வது உசிதமானது எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## சட்டென அதிகரித்த வெற்றிலை விலை

(கரணவாய்)

சந்தையில் வெற்றிலையின் விலை வேகமாக உயர்ந்துள்ளது. வறண்ட காலநிலை காரணமாக அறுவடை குறைந்துள்ளதே இதற்கு காரணம் என சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிங்களப் புத்தாண்டுக் காலம் வருவதால் வெற்றிலை விற்பனை அதிகரிக்கும் எனவும், தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு வெற்றிலை விநியோகம் பாரிய பிரச்சினையாக இருக்கும் என வெற்றிலை விற்பனையாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.(நி-5-60)

## சடலத்தைப் பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

07.03.2024 அன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நடராசா புலேந்திரன் (வயது- 58) என்பவர் 12.03.2024 அன்று இறந்துவிட்டார். இவர் சந்நிதி கோவில் தொண்டைமானாறை வசிப்பிடமாகக் கொண்டவர். இவருடைய உடல் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இவரின் உடலை அடையாளம் காட்டி 14 தினங்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-5)

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற உள்ளதாக பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று எதிர்வரும் 13 ஆம் திகதி சனி இரவு 8மணிக்கு சப்பற உற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு இரதோற்சவமும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-29)

## தமிழகத்தின் பிரபல பேச்சாளர் பங்குபற்றும் சிந்தனை அரங்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கியச்சுடர் த. இராமலிங்கம் பங்குகொள்ளும் சிறப்பு நிகழ்ச்சிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் அறிவாலயம் ஆளுமை விருத்திப் பயிலகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் ஆதீன பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

அறிவாலயம் ஆளுமை விருத்திப் பயிலக இயக்குநரும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளருமாகிய இ.சர்வேஸ்வரா தலைமையில் காலை 9 மணிக்கு இடம்பெறும். காலை அமர்வில் பட்டிமன்றங்களில் பேசும் ஆர்வமுள்ள இளையோருக்கான பயில்களம் இடம் பெறவுள்ளது.

அத்துடன் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் பிற்பகல் 4.30 மணிக்கு இடம் பெற்வுள்ளமாலை அமர்வில் இலக்கியச் சுடர் த. இராமலிங்கத்தை நடுவராகக் கொண்டு சிந்தனை அரங்கம் இடம்பெறவுள்ளது. (நி-5-33)

# இல்ல அலங்கரிப்பு விசாரணை தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மட்ட நிகழ்வுகளில் பொலிஸாரினதும் அரச புலனாய்வாளரினதும் இராணுவத்தினரதும் தலையீடுகள் குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் ஆசிரியர் சங்கம் முறைப்பாடு செய்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை, பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜிடம் முறைப்பாட்டை தெரிவித்துள்ளனர். முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த வாரம் நடைபெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வன்மை போட்டியின், இல்ல அலங்காரங்களில் மாணவர்களின் வெளிப்பாடுகள் தொடர்பாக, தெல்லிப்பழைப் பிரிவு பொலிஸார் மாணவர்களையும் ஆசிரியர்களையும் விசாரணைக்கு அழைத்தமையும், விசாரணைக்கு உட்படுத்தியமையும் அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்ற நடவடிக்கையாகும். இலங்கை அரசியலமைப்பின் [illegible] வரையறைக்குட்பட்டு கருத்தியல் ரீதியாகவும் கலை ரீதியாகவும் - குறியீட்டு வடிவங்கள் மூலமாகவும் பாடசாலை மட்ட இல்ல விளையாட்டு போட்டி அலங்காரங்களில் மாணவர்களின் பாடசாலை மட்ட வெளிப்பாடுகள், இலங்கை அரசியலமைப்பில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரத்துக்கு உட்பட்டதாகும்.


இத்தகைய சுதந்திரங்களை மதிக்காத, தெல்லிப்பழை பொலிஸாரின் அச்சுறுத்தல்களுடன் கூடிய விசாரணை செயற்பாடானது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதுடன் பாடசாலை நிர்வாகத்தினருக்கும் அடக்குமுறைகளை பிரயோகின்ற செயற்பாடுகளாகும்.

கல்விச் செயற்பாடுகளில் தெல்லிப்பழை பொலிஸாரின் அவசியமற்ற நடவடிக்கைகள் குறித்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டினைக் கோரிநிற்கின்றோம். என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



37

1958 ஏப்ரல் 9 ஆம் நாள் பண்டா -செல்வா ஒப்பந்தம் கிழித்துத் தூக்கி வீசப்பட்டது. சிங்கள ஸ்ரீ அழிப்புப் போராட்டம் போன்ற சம்பவங்கள் எல்லாம் சேர்ந்து மாபெரும் கலவரமாக மாறி இனப் பிரச்சினையின் இன்னொரு கோர முகத்தை '1958 இனக் கலவரமாக' வெளிக்காட்டியது.

இவ்வன்முறைகள் 1958 மே 22 முதல் மே 27 வரை இடம் பெற்றன. ஆனாலும், 1958 ஜூன் 1 இல் அவசரகாலச்சட்டம் அறிவிக்கப் பட்ட பின்னரும் ஆங்காங்கே வன்முறைகள் இடம்பெற்றன. இந் நிகழ்வு பொதுவாக இனக்கலவரம் என அழைக்கப்பட்டாலும், சிலஇடங்களில் இன அழிப்பாகவே நடத்தப் பட்டது.

இவ் அழிப்பில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை கண்டெடுக்கப்பட்ட உடல்களின் எண்ணிக்கையைக் கொண்டு மதிப்பிடப்பட்டு 70 முதல் 300 வரையென அறிவிக்கப்பட்டது. இக் கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலானோர் தமிழர்கள் ஆயினும், தமிழர்களுக்குப் பாதுகாப்புக்கொடுத்தகாரணத்தினால் சில சிங்களவர்களின் உடமைகளும் சேதமாக்கப்பட்டன.

அத்துடன், தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் பகுதிகளில் சிங்களவர்கள் சிலர் தமிழர்களால் தாக்கப் பட்டனர். இதன் முழு விவரமும் இங்கு ஆராயப்படவில்லை.

**1958 கலவர நிகழ்வுகள்**

மே22 – இனக்கலவரம் ஆரம்பமானது. அடுத்த சில நாட்களில் நூற்றுக் கணக்கான தமிழர்கள் சிங்களவர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

மே23 - மட்டக்களப்பில் தொடருந்து ஒன்று தடம்புரண்டது.

மே24 - இலங்கையில் பொலநறுவை தொடருந்து நிலையத்தில் தொடருந்தில் வந்த தமிழ்ப்பயணிகள் தாக்கப்பட்டுக் கொல்லப் பட்டனர். பல இடங்களிலும் இனக் கலவரம் பரவியது.

மே25 - பொலநறுவை வையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மே27 - இலங்கை முழுவதற்கும் அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்டு, ஊடகத்தணிக்கை அமுல் படுத்தப்பட்டது. நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிரப்பிக்கப் பட்டது.

மே27 - இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜாதிக விமுக்தி பெரமுன ஆகிய கட்சிகள் தடைசெய்யப்பட்டன.

மே27 - இலங்கையின் தெற்கே பாணந்துறையில் சிங்களக் காடையர்களால் இந்துக் கோவில் ஒன்று எரிக்கப்பட்டு, கோவில் பூசகர் சுந்தரராஜக் குருக்கள் சித்திரவதை செய்யப்பட்டு உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டார்.இவரது 25 வயது இளம் மனைவியும் அவரது 4 வயதுக் குழந்தையும்பின்னர் அகதிகளாக யாழ்ப்பாணம் வந்தனர்.

மே28 - கல்கிசையில் தமிழருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்ட ஆயிரத்திற்கும் அதிகமானோர் இராணுவத்தினரால் கலைக்கப்பட்டனர்.

மே28 - கல்கிசை, ஹோட்டல் வீதியில் தமிழர் ஒருவர் உயிருடன் எரிக்கப்பட்டார்.

மே29 - யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு சிங்களவரும் கொல்லப்படவில்லை என அங்கு பயணம் மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் குணசேன டி சொய்சா பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவிற்கு அறிவித்தார். யாழ்ப்பாணம் நாகவிகாரை தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

மே30 - இலங்கையின் தெற்கே கலவரங்களால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் அகதிகளாக கொழும்பு றோயல் கல்லூரி, புனித பீட்டர் கல்லூரி ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டனர்.

ஜூன்1 - கலவரங்களில் பாதிக்கப்பட்ட4,397 தமிழ் அகதிகள் கப்பல் மூலம் காங்கேசன் துறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கிருந்து 2,100 சிங்களவர்கள் கொழும்பு கொண்டு வரப்பட்டனர்.

ஜூன் 5 - இலங்கைத்தமிழரசுக் கட்சியின் 10 உறுப்பினர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

ஜூன் 6 - மேலும்5,029 தமிழர் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப் பப்பட்டனர்.

ஜூன் 8 - ஜாதிக விமுக்தி பெரமுன கட்சித்தலைவர் கே. எம். பி.ராஜரத்தினா வீட்டுக்காவலில் வைக் கப்பட்டார்.இக் கலவரத்திற்கு இன்னுமொரு காரணமாக அமைந்தது பிரித்தானியக், அரசகடற்படையினர் தமது திருகோணமலைத்தளத்தை மூடியதுமாகும். அதாவது பிரித்தானியக் அரச கடற்படையினர் தமது திருகோணமலைத்தளத்தை மூடியதை அடுத்து 400 தமிழ்த் தொழிலாளர்கள் பணியிழந்தார்கள்.

இவர்களை சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பொலநறுவை மாவட்டத்தில் குடியமர்த்த அரசு திட்டமிட்டது. இந்நடவடிக்கை அம் மாவட்டத்தில் உள்ள சிங்களவர் மத்தியில் எதிர்ப்பைக்கிளப்பியது. சிங்களக் குடி[illegible] அங்கு ஒ[illegible]வாகி அங்கு குடியேற வந்த தமிழர்களைத் தாக்கத் தொடங்கியது.

1957-1958 ஆம் ஆண்டுகளில், தமிழர் அஹிம்சா வழியில் சிறி எதிர்ப்பு போராட்டம்நடத்தினார்கள். அதற்கு எதிர்வினையாக சிங்கள காடையரினால் தமிழர்கள் தாக்கப் பட்டனர்.

இதனை தமிழர்கள் எவ்வாறு புரிந்து கொள்கின்றனர் என்றால் "நியாயமான கோரிக்கைகளை முன் வைத்த தமிழர்களின் அஹிம்சை வழிப் போராட்டத்தைக் குழப்பிய சிங்கள இனவெறியர்கள், தமிழர்களை படுகொலை செய்தனர்."

இதனை சிங்களவர்கள் எவ்வாறு புரிந்து கொள்கின்றனர் என்றால் "சிங்கள எழுத்துகளை தார்பூசி அழித்த செயலானது, சிங்கள மொழியையும், சிங்கள இனத்தையும் பூண்டோடு அழிப்பதற்கான தமிழரின் சதி." இவ்விரு சமூகங்களும் இவ்வாறான மனோநிலையிற்றான் இன்றும் வாழ்ந்துகொண்டிருப்பது கவலைக்குரியதொன்றாகும்.

**தனிச் சிங்களத் திருத்தச் சட்டமூலம்**

1956/33 சட்டத்தின் மூலம் சிங்களம் மாத்திரம் அரச கரும மொழியாகப் பிரகடனம் செய்யப் பட்டது. இத் தவறைத் திருத்துவதற்கு 1958 இல் மற்றுமோர் சட்டம் உருவாக்கப்பட்டது. அது 1958/28 இன் நியாயமான தமிழ்மொழி பாவனைச் சட்டமாகும்.அதன் மூலம்அரச நடவடிக்கைகளை தமிழ் மொழியில் செயற்படுத்துவதற்கு சட்டங்கள் இயற்றப்பட்டன. 1958 செப்டம்பர் 4 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட இச் சட்டம் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான பலமான அடித்தளமாக இருந்தது என அப்போது பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது. இச் சட்டத்தின் பிரகாரம்

- அரச தமிழ்ப்பாடசாலைகளின் போதனா மொழி தமிழாக அமைய வேண்டும்.
- தமிழர்கள் அரச சேவையில் சேர்வதற்கான பரீட்சைக்குதமிழ் மொழியில் தோற்றலாம்.
- தமிழ்மொழி பேசும் ஒருவர் அரச நிறுவனம் ஒன்றுடன் தொடர்பு கொள்கையில் தமிழ் மொழியில் தொடர்பு கொள்ளும் உரிமை உண்டு.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச நடவடிக்கைகள் தமிழ் மொழியில் இடம்பெற வேண்டும்.

என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

**தமிழ் அரச ஊழியரான கோடீஸ்வரன் வழக்கு**

1956 இல் சிங்களம் அரச கரும மொழி ஆதலால், 1958 இன் தமிழ் மொழி உபயோகச் சட்டம் செயற்படுத்தப்படாமை ஆகியனவற்றிற்கு இடையே குறிப்பிட்ட கால எல்லையுள் (3ஆண்டுகள்) சிங்கள மொழித் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனை அச் சொட்டாக அமுலாகியது. தேர்ச்சி பெறாதோரின் சம்பளம் இடைநிறுத்தப்பட்டது. இது இலங்கை அரசியலமைப்பை மீறும் செயல் என்பதை எடுத்துக்காட்டுவதற்கு, தமிழ் அரச ஊழியரான கோடீஸ்வரன் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அதில் வெற்றியும் பெற்றார்

அரசாங்கம் மேன் முறையீட்டு நீதிமன்றம் முன்சென்று இத் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்தது.மாவட்ட நீதி மன்றத்தின் தீர்ப்பைமேன் முறையீட்டுநீதி மன்றம் நிராகரித்தது. எனவே கோடீஸ்வரன் இதனை எதிர்த்து கோமறைக்கழகத்திடம் வழக்குத் தொடர்ந்தார். இவ்வழக்குத் தீர்ப்பிற்குஅமைய அரசியலமைப்பின் 29(2) உறுப்புரைமீறப்பட்டுள்ள தாகத்தீர்ப்புக் கூறப்பட்டது. இத்தீர்ப்பு 1970 இல்வழங்கப்பட்டது.

1972 அரசியலமைப்பில் கோமறைக் கழகத்திடமிருந்தும் விடுதலைபெறவேண்டும் எனத்தீர்மானிக்கப்பட்டு அரசியலமைப்பு திருத்தம் செய்யப்பட்டது. 1972 அரசியலமைப்பின் 7 ஆம் உறுப்புரைக்கு அமைய 1956/33ஆம் சட்டத்தில பிரகடனப்படுத்தியவாறு சிங்கள மொழி அரசகரும மொழியாக அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது. இவ் உறுப்புரை முன்னைய அரசியலமைப்பின் 29(2) ஆம் உறுப்புரைக்கு முற்றிலும் மாறுபட்டது.

**டட்லி-செல்வா ஒப்பந்தம் (1965)**

1964 டிசெம்பரில் திருமதி சிறிமாவோபண்டாரநாயக்காவின் அரசாங்கம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர் கொண்டது. அதனை வெற்றிபெறச்செய்து அரசாங்கத்தை கவிழ்ப்பதில் தமிழரசுக் கட்சியின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது. தேர்தல் நெருங்கியதால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழ் மொழிக்கானஅரச அந்தஸ்தை அங்கீகரித்து அமுலாக்குதல் உட்படபல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பேச்சுக்களை நடத்தி ஓர் ஒப்பந்தத்தை எஸ் ஜே.வி.செல்வநாயகம் செய்து கொண்டார். அது டட்லி-செல்வா ஒப்பந்தம் என பிரபலமாக அழைக்கப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சதொசவில்...

பெரிய வெங்காயம், சிறிய வெங்காயம், கடலை, உருளைக்கிழங்கு, பால்மா, கோதுமை மா, இறக்கு மதி செய்யப்பட்ட முட்டை, வெள்ளை அரிசி, சோயா மீட் ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, பெரிய வெங்காயம் ஒரு கிலோ கிராமின் விலை 55 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலை 495 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிறிய வெங்காயம் ஒரு கிலோ கிராமின் விலை 30 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலை 290 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு கிலோ கிராம் கடலையின் விலை 16 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன் உருளைக்கிழங்கின் விலை 15 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

அவற்றின் புதிய விலையாக 494 ரூபா மற்றும் 195 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பால்மா 400 கிராமின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டு 925 ரூபாய் புதிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோதுமை மா ஒரு கிலோ கிராமின் விலை 08 ரூபாயால் குறைக்கப்பட்டு 192 ரூபாய் புதிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தற்போது முட்டையொன்று 43 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுகின்ற நிலையில் புதிய விற்பனை விலை 36 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை அரிசி ஒரு கிலோ கிராம் 03 ரூபாயால் குறைக்கப்பட்டு 192 ரூபாய் புதிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் சோயா மீற்றின் புதிய விலை 593 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## வவுனியாவில்...

இடம்பெற்றுள்ளது.

வவுனியா, செட்டிகுளம், முதலியார்குளம் பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டிலுள்ள கிணற்றுக்கு பக்கத்திலுள்ள வாழை மரத்தின் குழையினை வெட்ட முற்பட்ட சமயத்தில் தவறி கிணற்றினுள் வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவருகின்றது.

சம்பவ இடத்திற்கு சென்ற செட்டிகுளம் பொலிஸார் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,10,250)

## பெறுமதி...

இதேவேளை, வங்கியியல் திருத்தச் சட்டமூலமும் மூன்றாவது முறையாக வாசிக்கப்பட்டு திருத்தம் இன்றி நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## வீடொன்று...

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் எதிர்பாராத நிலையில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. உயிர்ச் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை எனினும் வீட்டில் உள்ள சொத்துக்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இருப்பினும் தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

## உழவு இயந்திரம்...

குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்குட்பட்ட குரவில் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் வெள்ளப்பள்ளம் உடையார்கட்டு பகுதியினைச் சேர்ந்த 31 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், குறித்த நபர் குரவில் பகுதியில் உழவு இயந்திரத்தினை ஓட்டிசென்ற வேளை வலிப்பு ஏற்பட்டு உழவு இயந்திரத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டுள்ளார்.

இந்நிலையில், உழவு இயந்திரம் குறித்த சாரதியின் மேல் ஏறி விபத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

## உணவில் விஷம்...

கள் அனைத்தும் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளதுடன் பிள்ளைகளுக்கு சமைத்து வைத்த மதிய உணவிலும் விஷமிகளால் விஷம் கலக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ம-7,10,100)

## முரு...

இதனை முருகன் சார்பில் வழக்காடிய சட்டத்தரணி புகழேந்தி உறுதிப்படுத்தியுள்ளார்.

குறித்த மூவரும் நாடு திரும்பும் வகையில், கடந்த வாரம் இலங்கை உயர்ஸ்தானிகராலயம் கடவுச்சீட்டு வழங்கியிருந்தது.

இந்நிலையில், குறித்த மூவரையும் இலங்கைக்கு அனுப்புவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியிருந்த நிலையில், அவர்கள் அனைவரும் இன்று காலை நாட்டிற்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் 33 ஆண்டுகள் வரையில் சிறையில் இருந்த குறித்த அனைவரும் 2022ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட நிலையில், திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இதில் சாந்தன் நோய்வாய்ப்பட்ட நிலையில், கடந்த ஜனவரி மாதம் சென்னை ராஜிவ் காந்தி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த மாதம் உயிரிழந்தார்.

இதனையடுத்து அவரது உடல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு யாழ்ப்பாணத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்நிலையில், ஏனைய மூவரையும் விரைவில் இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்ற நிலையில், அவர்களை சொந்த நாட்டிற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

இதன்படி மூவரும் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)


வெல்லப்பட்டுள்ளது

கல்வியங்காடு முகவர் **விஜயகுமார்** ஊடாக விற்பனை செய்யப்பட்ட லொத்தர் சீட்டின் மூலம்
- 10.03.2024 **மகஜன சம்பத** மூலம் 100,000/=ம்
- 22.03.2024 **மகஜன சம்பத** மூலம் 100,000/=ம்
- 31.0.3.2024 **சசிரி** மூலம் 200,000/=ம்

வெல்லப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.



(337)



மஹஜன சம்பத — திகதி 2024.04.02 — சீட்டிழுப்பு இலக்கம் 5438 — ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 1 4 8 8 9 1
அத சம்பத — Y 8 8 9 1 — சீட்டிழுப்பு இலக்கம் 0013 — National Lotteries Board

தன நிதானய — திகதி -2024.04.02 — சீட்டிழுப்பு இலக்கம் - 1468 — M 07 41 47 81 M — 70040

மெகா பவர் — திகதி 02/04/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1786 — W 20 16 17 52 61 — 98954

லக்சி 7 VIP — திகதி 2024.04.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0264 — M 4 6 9 8 8 3 M

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3680 — சீட்டிழுப்பு திகதி 02.04.2024 — U 36 39 55 57 — U — 10291

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.04.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0747 — மிதுனம் 39 50 57 59 மிதுனம் — 67035 — 27

உத்தியோகபூர்வ முடிவுகள் — 02.04.2024 — வெற்றி வாரம் 146 — வர்ணம் சிவப்ப — ஆங்கில எழுத்து G — 2 0 1 9 7 8 — 67557 — N — அடுத்த சுப்பர் ஜக்பொட 32,430,256.00 — DLB

SUPER BALL — 2412 — 02.04.2024 — செவ்வாய் — 11 17 41 60 K — 13769 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,740,724.80 — DLB

சனிதா — 2024.04.02 — வெற்றி வாரம் 4573 — 09 21 35 51 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,009,358.80 — 15688 — DLB

சசிரி — வெற்றி வாரம் 462 — 2024.04.02 — வெற்றி இலக்கங்கள் 02 10 47 — 36147 — ரூ3,104,280/- — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4124 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2024.04.02 — தினம் செவ்வாய்க்கிழமை — வெற்றி இலக்கங்கள் 01 18 49 54 — கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 16,195,881.20 — 781818 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — R 10 05 28 39 44 — 1588 — 753201 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 515,548,331.80 — 2024.04.02 செவ்வாய் — DLB

அட கோடிபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் : 2238 — 2024.04.02 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 103,815,534.40 — 05 08 55 60 G — 525893 — DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்
# எவ்வித கருத்தையும் வெளியிட முடியாது - மைத்திரி

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் வெளியிட முடியாதுஎன முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தற்போது போதியளவான பாதுகாப்பு தமக்கு கிடைக்கப் பெறுவதாகவும் அவர் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதி, ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பில், அண்மையில் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து குறித்து செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

எனினும், குறித்த வழக்கு தற்போது, நீதிமன்றில் நிலுவையில் உள்ளதால் அது தொடர்பில், தாம் எவ்வித கருத்தையும் வெளியிட முடியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (ம-7,10)

## நாணய மாற்று வீதம் குறைந்ததே
# எரிபொருள், எரிவாயு, மருந்து விலை குறைவுக்கு காரணம் - பந்துல

முன்பு 400 ரூபாயாக இருந்த நாணய மாற்று விகிதம் தற்போது 300 ரூபாயாகக் குறைந்துள்ளது. இதனால் எரிபொருள், எரிவாயு, மருந்து ஆகியவற்றின் விலைகள் குறைகின்றன என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் விலைச் சூத்திரம் இன்றி மேற்கொள்ளப்பட்டது போன்று உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வடைந்த போதிலும் நாட்டு மக்களுக்கு குறைந்த விலையில் எரிபொருள் வழங்கப்பட்டமையால் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு பெரும் நட்டம் ஏற்பட்டது.

ஆனால் தற்போது அவ்வாறு செய்யப்படவில்லை, உலக சந்தையில் உள்ள எரிபொருள் விலைக்கு ஏற்ப நாட்டில் எரிபொருள் விலை தீர்மானிக்கப்படுகின்றது.

முன்பு 400 ரூபாயாக இருந்த நாணய மாற்று விகிதம் தற்போது 300 ரூபாயாகக் குறைந்துள்ளது, இதனால் எரிபொருள், எரிவாயு, மருந்து ஆகியவற்றின் விலைகள் குறைகின்றன.

மேலும் உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பு அல்லது குறைவினால் இந்நாட்டின் எரிபொருள் விலையில் ஏற்ற இறக்கம் காணப்படுவதாகவும், அதனை அரசியல்வாதிகளாலோ அல்லது அரசாங்கத்தினாலோ மாற்ற முடியாது என குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)


## மாப்பிள்ளை தேவை

- அனலைதீவு - வேலணை, இந்து, கௌரவகுலம், 1990, மகம், Bachelor of Optometry, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண்-32633
- யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம், 1991, உத்தரம், Graduate (family Law) Lawyer, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண்-32297
- உரும்பிராய் - மாவிட்டபுரம், இந்து, கௌரவகுலம், 1991, புனர்பூசம், MBBS Doctor, Australia வில் வேலை செய்து கொண்டிருக்கும் USA citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32050
- புங்குடுதீவு, இந்து, கௌரவகுலம், 1992, உத்திரட்டாதி, ACCA Completed Accountant, Canada பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- தெல்லிப்பளை - கோண்டாவில், இந்து, கௌரவகுலம், 1993, அச்சுவினி, BSc Nursing Jaffna University, Canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- பருத்தித்துறை - சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம், 1986, திருவாதிரை, MSc in IT and Charted financial analyst, Canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32904
- யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம், 1995, அத்தம், BSc, Post Graduate Dip, Canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- அல்வாய், இந்து, கௌரவகுலம், 1987, பரணி, BSc(Hons), Chemical Engineering Technoloy, Canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- கந்தர்மடம், இந்து, கௌரவகுலம், 1990, அச்சுவினி, BBA, Accountant, Canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 31884
- உடுப்பிட்டி, இந்து, கௌரவகுலம், 1995, அவிட்டம், masters of Bio medical(Uk), UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- காரைநகர் - பருத்தித்துறை, இந்து, கௌரவகுலம், 1995, பூரம், BSc in Accounting and Finance, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- உடுவில் - இளவாலை, இந்து, கௌரவகுலம், 1990, மிருகசீரிடம், MBBS Doctor, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32235

(342)

S.Sharma J.P Astrologer
- 077 539 3728
- 077 803 8193


## பொருளாதாரம்...

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் பொருளாதாரம் மீண்டெழும் பாதையில் பயணித்தாலும் ஏழைகள் மற்றும் பாதிக்கப்பட்ட நிலையில் வாழும் மக்களின் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுத்திய தாக்கத்தினை தணிப்பதற்கான உறுதியான முயற்சிகள் முக்கியமானவை இதனுடன் காத்திரமான நம்பகமான கட்டமைப்புசார் நடவடிக்கைகளுக்கான வழிமுறைகளும் முன்னெடுக்கப்பட வேண்டுமென பாரிஸ் ஹடாட் ரெஸோஸ் தெரிவித்தார்.

இலங்கையில் பணவீக்கம் குறைந்து வருவதாகவும் புதிய அரசிறைகொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்புலத்தில் அதிக வருமானங்கள் காணப்படுவதாகவும் சுமார் 5 தசாப்த காலப்பகுதியில் முதன்முதலாக நடைமுறைக் கணக்கில் மிகை ஏற்பட்டுள்ளதாகவும் பண அனுப்புதல்கள் அதிகரித்துள்ளதாகவும் சுற்றுலாத்துறை மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 2.2 வீதமான வளர்ச்சியை காணும் என எதிர்வு கூறப்பட்டது. உறுதியாக நிகழ்வதற்கான அறிகுறிகளைக் காட்டியது. 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு பின்னர் இது ஏற்பட்டது. இருப்பினும், உயர்வான வறுமை மட்டங்கள், வருமான சமத்துவமின்மை, தொழில் சந்தை அக்கறைகள், ஆகிய பிரச்சினைகளை நாடு முகங்கொடுத்து வருவதாக உலக வங்கியின் அண்மைய அரையாண்டு அறிக்கை இற்றைப்படுத்தல் தெரிவிக்கின்றது.

இருப்பினும் தொடர்ந்து நான்கு வருடங்களாக வறுமை தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் 25.9 வீதமான இலங்கையர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வசிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தொழிற்படை பங்குபற்றுதலிலும் வீழ்ச்சி காணப்பட்டது. குறிப்பாக பெண்கள் மற்றும் நகர் பிரதேசங்களில் இது காணப்பட்டது.

நுண், சிறிய, மத்திய அளவிலான நிறுவனங்கள் மூடப்பட்டதனால் இந்த பிரச்சினை அதிகமானது. அதிக விலையேற்றம், வருமான இழப்புக்கள், போதிய வேலை வாய்ப்பின்மை ஆகியவற்றின் காரணமாக உணவுத் தேவைப்பாடுகள் மற்றும் சுகாதாரம், கல்வி சார்ந்த செலவுகளை சமாளிப்பதற்காக கடனை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை குடும்பங்களுக்கு ஏற்பட்டது என்று தெரிவித்தார். (ம-7,10)

## சபை...

ராஜபக்ஷ சபை நடவடிக்கைகளை நேற்று மாலை 4 மணி வரை ஒத்திவைத்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பதினைந்து பேரின் பெயர்களையும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் 6 பேரின் பெயர்களையும் கூறி அழைத்த போதிலும் அவர்களில் உறுப்பினர் ஒருவர் கூட சபையில் இருக்கவில்லை. இதனையடுத்து, சபையின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக பிரதி சபாநாயகர் தெரிவித்தார். (ம-7,10)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (341)

076 825 7716 (ஆகாஸ்)

### யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு (விலை குறைக்கப்பட்டது)

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 ½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக்கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.

மொத்தமாக **5 கோடியே 25 இலட்சம்**

(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)

தொடர்புகளுக்கு:

+447963743585 (Whatsapp)
021 222 7141 (Sri Lanka)
Email : jamesraj_uk@yahoo.co.lk

(225)

### IELTS - 06.04.2024 New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (343)

### வீடு மற்றும் கடை விற்பனைக்கு

யாழ் வேம்படி வீதி (கொன்மன் பாடசாலை பின் வீதி) வீடு மற்றும் கடை விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
077 160 6036
(338)

### விற்பனைக்கு

சுருக்கு கேற் விற்பனைக்கு உண்டு.
077 573 2563
(19055)

### மொத்த கொள்வனவு

450g அங்கர் பால்மா -1046/= மற்றும் யோக்கட் -54/= மொத்தக் கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்



Happy Super market
உரும்பிராய்
077 350 4700
(345)

### வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு: (318)
074 17 37 684

### வீடு விற்பனை

சுன்னாகம் கிழக்கு புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் வீடு விற்பனைக்குள்ளது.
Whatsapp
416 303 5706
SRILANKA
076 934 7728
(324)

### உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-0057)

### V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0057)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் இல.191, ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org